# நூற்றாண்டு விழா மலர்

குழந்தை இயேசுவின்



சின்னத்திரேசாள்

## CENTENARY SOUVENIR OF ST. THERESA'S

### ENTRY INTO ETERNAL GLORY.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித திரேசாளின் விண்ணக மகிமை பெற்ற

# நூற்றாண்டு விழா மலர்

*1897 — 1997*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்க் குழு

1. பங்குத் தந்தை
2. திரு. C. A. இம்மானுவேல்
3. ,, A. ஜெயராஜா
4. ,, D. J. ஆனந்தராஜா
5. ,, J. A. மரியதாசன்
6. ,, S. மரியநாயகம்
7. ,, S. சேவியர்
8. திருமதி, சறோ மங்களதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித திரேசாள் ஆலயம்



றக்கா வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரைப் பற்றி

வேத போதக நாடுகளின் பாதுகாவலியாகத் திகழ்ந்து வரும் குழந்தை யேசுவின் சிறிய புஸ்பம் புனித திரேசாளின் விண்ணக மகிமை பெற்ற நூறாவது ஆண்டை அகில உலகமும் பக்தி ஆர்வத்துடன் கொண்டாடும் வேளையில் இப் புனிதையின் பெயரால் யாழ் நகரில் ஏக ஆலயமாக விளங்கும் றக்கா வீதியில் அமைந்துள்ள 'புனித திரேசாள்' ஆலய பங்குத் தந்தையும், மக்களும் இந் நூற்றாண்டு விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாடுவதுடன் இந்த நிகழ்வை வருங்கால சந்ததியினரும் நினைவு கூரும் வண்ணம் நினைவு மலர் ஒன்றைப் பிரசுரிக்கின்றோம்.

கிறீஸ்தவம் ஆரம்பித்து 2000 இரண்டாயிரம் யூபிலி ஆண்டை எதிர்பார்த்திருக்கும் எமக்கு, அதற்காக நம்மை ஆயத்தம் செய்து கொள்ள அன்பைப் பகிர்ந்து கொண்டு வாழ பாப்பரசர் அறை கூவல் விடுக்கின்றார்.

எனது புனிதை தனது செப, தப வாழ்வால் இறைவனோடு ஒன்றித்து மற்றவர்களுக்காக மன்றாடினாள். அவளது வாழ்வை முன்னோடியாகக் கொண்டு அடுத்தவர்களுக்காகச் செபித்துக் குற்றம் குறைகளை மன்னித்து வாழ்வதன் மூலம் நாம் எடுக்கும் புனிதையின் விழாவை அர்த்தமுள்ளதாக்குவோம்.

புனிதையின் நூற்றாண்டு விழா மலரைச் சிறப்பிக்க ஆசிச் செய்திகள், வாழ்த்துரைகள், வரலாறுகள், அறிக்கைகள், கவிதைகள், கட்டுரைகள் முதலிய ஆக்கங்கள் இடம் பெறுகின்றன.

இம்மலர் உங்கள் சிந்தனைக்குச் சிறந்த விருந்தாக அமைய உங்கள் கைகளில் தவழ விடுக்கின்றோம் மலர்க்குழு இவ் வெளியீட்டுக்கு ஊக்கமளித்து உதவிய சகலருக்காகவும் விழா நாயகியாகிய எமது புனிதை இறைவனிடம் பரிந்துரைப்பாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

குழந்தை யேசுவின் சிறிய புஷ்பம் புனித திரேசம்மாள் விண்ணக மகிமைபெற்ற நூற்றாண்டு விழா நினைவினைச் சுண்டுக்குளி, புனித திரேசம்மாள் ஆலயப் பங்கு மக்கள் வெகுசிறப்பாகக் கொண்டாடு வதை அறிந்து பெரு மகிழ்ச்சி கொள்ளுகிறோம்.

குழந்தை யேசுவினுடையவும் திருமுகத்தினுடையவும் திரேசாள் எனப் பெயர் பூண்டு ஒன்பது ஆண்டுகள் மட்டும் கார்மேல் மடத் துறவியாக வாழ்ந்து 24 வயதில் 1897 இல் இறைபதமடைந்த புனித திரேசம்மாள் மறைபரப்புப் பணியிற் பரலோக பாதுகாவலியாக இன்று விளங்குகிறாள்.

19 ஒக்ரோபர் 1997 மறைபரப்பு ஞாயிறு தினத்தன்று உரோமாபுரி புனித இராயப்பர் பேராலயத்தில் திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் புனித திரேசம்மாளைத் திருச்சபையின் மறைவல்லு நர்களில் ஒருவராகப் பிரகடனப் படுத்த இருப்பது புனித திரேசம்மா ளின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களில் எமக்கெல்லாம் மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

"ஓர் ஆன்மாவின் வரலாறு" என்ற புனித சின்னத் திரேசம்மாள் எழுதிய நூலை வாசித்து ஆன்ம வளம் பெறும்படி இவ்விழாக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்கும் வேண்டுகோள் விடுக்க விரும்புகிறோம்.

வேதபோதக நாடுகளின் பாதுகாவலியான புனித சின்னத் திரேசம்மாளின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களில் ஈடுபடும் அனைவருக்கும் எமது இறையாசீர் மிக்க வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

ஆயரில்லம்
யாழ்ப்பாணம்

தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ் ஆயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



யாழ் மறைபரப்புப் பணியிலே முழுமையாகத் தம்மை இணைத்துக் கொண்டவர், மறைந்த சுவாமி ஞானப்பிரகாசர். இப்பணியின் பரலோக பாதுகாவலரில் ஒருவரான குழந்தையேசுவின் சிறிய புஸ்பம், புனித தெரேசம்மாள் பெயரால் யாழ் நகரில் ஓர் ஆலயம் நிறுவ விரும்பினார். அதை முன்பு சிவியா தெரு என்றழைக்கப்பட்ட வீதிக்கு அருகாமையில் அமைத்தார். ஆனால் மத விரோதிகளின் துவேஷ நடவடிக்கைகள் மீண்டும் மீண்டும் இடம்பெற்று இப் பணிதடைப்பட்டமையால் இம்முயற்சி கைவிடப்பட்டது.

1974-ம் ஆண்டு நக்கா வீதியை அண்மித்த பகுதிகளில் கத்தோலிக்கர் செறிந்து வாழ்ந்து வந்ததாலும், அப்பகுதியிலே ஓர் ஆலயம் தேவையாய் இருந்ததாலும் அதற்குரிய காணியைப் பெற்று குழந்தை யேசுவின் புனித சின்னத் தெரேசம்மாளின் பெயரால் உரியகாலத்தில் இவ்வாலயம் உதயமானது. பரிசுத்த குழந்தை யின்மறைபரப்பு பணியகம் மனமுவந்து தந்த நிதி உதவியாலும், மக்களின் பங்களிப்பாலும், இப்பணி முழுமையாக நிறைவுற்றது.

புனித தெரேசம்மாளின் விண்ணக வாழ்வின் 100-ம் ஆண்டு நிறைவை அகில உலகத்திருச்சபை தனிப்பெருமையுடன் கொண்டாடும் இவ்வாண்டில், யாழ் வாழ் மக்கள் அனைவரும், இப்பங்கு மக்களுடன் இணைந்து இப்புனிதருக்கு விழாஎடுத்து விமரிசையாய்க் கொண்டாடுவது பொருத்தமானதே. இப்புனிதரைத் திருச்சபைக்கு உருவாக்கித் தந்த நல்ல தேவனுக்கு நன்றி கூறிப் போற்றுவோம். இறைமகன் யேசுவுக்கு மிகவும் பிரியமான சிறிய புஸ்பம், புனித தெரேசம்மாள் வல்லமையோடு எங்கள் அனைவருக்காகவும் வேண்டி இறை ஆசியை நிறைவாகப் பெற்றுத்தருவாளாக. சகல புனிதரிலும் இறைவன் மகிமைப்படுத்தப்படுவாராக.

✠ வ. தியோகுப்பிள்ளை
இளைப்பாறிய யாழ். ஆயர்

22-09-97

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

கண்டிக்குளி புனித சின்னத் தெரேசம்மாள் ஆலயத்தைச் சேர்ந்த பக்தர்கள் அப்புனிதை இறைபதம் அடைந்த தன் நூற்றாண்டைச் சிறப்பிக்குமுகமாகச் சிறப்பு மலர் வெளியிடுவதையிட்டுப் பெருமகிழ்வடைகின்றேன்.

இவ்வாலயம் அமைந்துள்ள சுற்றாடலில் வாழ் மக்கள் தமது பங்கின் பிரதான ஆலயமாகிய புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்துக்குச் செல்வதில் பல்வேறு சிரமங்களை அனுபவித்தனர். இதனைக் கருத்திற்கொண்ட அன்றைய ஆயர் அதி. வந். தியோகுப்பிள்ளை ஆண்டகை அம்மக்களுக்கு ஒரு சிற்றாலயத்தை அமைப்பது அவசியம் என்று உணர்ந்தார். அதேவேளை பங்கிலும், பாடசாலையிலும் அளப்பரிய பணியாற்றி வரும் கார்மேல் சபை கன்னியர்களுக்கு ஒரு முன்னோடியாகவும், விசேட பாதுகாவலருமாக விளங்கும் புனித சின்னத் திரேசம்மாளையே அமையவிருக்கும் சிற்றாலயத்தின் பாதுகாவலராகக் கொள்ளவும் தீர்மானித்தார்.

சிறு குடிசையாக ஆரம்பித்து, பொருத்தமான காணி கிடைத்ததும் அவ்விடத்தில் நிரந்தர ஆலயத்திற்கு அத்திவாரமிட்டு, பல பொதுமக்கள், அப். கார்மேல் அருட் கன்னியர்கள், பங்குத் தந்தை போன்றோரின் ஆர்வம் நிறைந்த ஒத்துழைப்பினால் வளர்ந்தது, இன்றைய ஆலயம். இதன் வளர்ச்சியில் ஆரம்ப காலத்தில் எனக்கிருந்த நெருங்கிய தொடர்பின் மூலம் ஒரு சிலரை நினைவுகூர விரும்புகின்றேன். நிதிக்கும் கட்டிட மேற்பார்வைக்கும் பொறுப்பாகவிருந்த அருட் சகோதரி அன்ரனீனாவும் புனித டொன் பொஸ்கோ பாடசாலையின் தொடர்ந்து வந்த அதிபர்கள், கன்னியர்களினதும் முன்னாள் அதிபர்), கட்டிடக் கலைஞர் மணி, திரு. இராசனாயகம் (Motor car Mechanic) திரு. தேவு, இவர்களுடன் இன்னும் பல பங்கு மக்கள் இரவு பகலாக உழைத்தனர். இதன் பயனாக இன்று புனித திரேசம்மாவிற்கு ஓர் ஆலயம் கம்பீரமாகக் காட்சிதருகிறது. இந்த வேளையில் ஆலய நிர்மாணிப்புக்கான செலவின் பெரும்பகுதியை உதவியாக வழங்கிய பாப்பரசரின் 'மறைபரப்புச் சபையினை' நாம் நன்றியுடன் நினைவுகூரவேண்டும்.

குழந்தை யேசுவின் புனித தெரேசம்மாள் வாழ்ந்தது 24 ஆண்டுகள் மட்டுமே (1973 - 97 வரை) இறைவனுக்குத் தன்னை முழுமையாக அர்ப்பணிக்க விரும்பிய அவர் தமது பதினைந்தாவது வயதில் கார்மேல் Cloistered Carmal) துறவற சபையில் புகுந்து செபத்திலும் தபத்திலும் ஈடுபட்டுள்ளாள் என நாம் அறிகிறோம். குழந்தை உள்ளம், ஆழ்ந்த தாழ்மை, தணியாத ஆன்ம தாகம், வற்றாத இறை அன்பு இப்படிப்பட்ட பண்புகள் அவள் வாழ்வைப் புனிதப்படுத்தியதோடு, இறைவனை அடைய இலகுவான வழிகாட்டலாகவும் உதவின. இப்புனிதை வளர்ந்துவரும் திருச்சபைக்கு (Missionary Church பாதுகாவலியாக இருப்பதோடு மக்களைக் கிறீஸ்துவின் சீடராக்கி மீட்புக்கு இட்டுச் செல்வது நாம் பெற்ற பாக்கியம் எனலாம்.

குழந்தை யேசுவின் புனித தெரேசம்மாளின் வாழ்வு நமது வாழ்வுக்கு முன்மாதிரியாக அமையவும், அவளது பாதுகாப்பும், வழிநடத்தலும் அவள் மீது பக்தி செலுத்தும் அனைவருக்கும் கிடைக்கவும் இந்த நூற்றாண்டு நிறைவு வேளையில் வாழ்த்துகிறேன்.

*Rt. Rev. Dr. J. Kingsley Swampillai*
*Bishop of Trincomalee – Batticaloa*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

புனித திரேசாளின் விண்ணகப் பிறப்பின் நூற்றாண்டு நினைவைக் கொண்டாடும் இறைமக்களாகிய உங்களின் உணர்வலைகளில் நானும் கலந்துகொள்கிறேன்.

மறைசாட்சியாகத் தன்னைக் கையளிக்கத் தாகம்கொண்ட திரேசாள், " அன்பு வழியே " இறையரசின் பாதை என்பதை உணர்ந்து கொண்டாள். திருச்சபையின் பலவித அழைப்புக்களைப் பெற்ற எல்லா நிலைகளில் உள்ளவரும் தூய அன்பினால் தூண்டப் பட்டாலொழியப் பலன் கொடுக்க முடியாதெனத் தனது வாழ்வினால் செய்தி கூறுகிறாள் புனித திரேசாள்.

இறையரசின் பணியில் மிக்க ஆர்வம்கொண்ட இந்தப் புனிதையின் அடிச்சுவடுகளைப் பின்தொடர்ந்து எமது உள்ளங்களையும் குடும்பங்களையும் அன்பிலும் விசுவாசத்திலும் புதுப்பிக்க ஒன்றுசேருவோம். கொடிய யுத்தத்தினால் குற்றுயிர் ஆக்கப்பட்டுள்ள எமது சமூகம் ஆன்மீகப் புத்துணர்வினால் படிப்படியாகக் குணமாக்கப்பட உழைப்போம்.

இறையன்பை ஆழமாகச் சுவைத்த புனித திரேசாளின் பலம் வாய்ந்த பரிந்துரைகளை நாடி, உங்கள் விழா முயற்சிகள் யாவும் ஆன்மீக வளங்களை உங்களிற் பிறப்பிக்க மன்றாடி வாழ்த்துகிறேன்.

✠ ஆயர் இரா. யோசேப்பு

Rt, Rev. Dr. Rayappu Joseph D.C L; D'D
Bishop of Mannar, Mannar.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

1966 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 30ஆம் நாள் கால்கோளான குழந்தை யேசுவின் விண்ணக வாழ்வின் ஒரு நூற்றாண்டின் யூபிலி ஆண்டை இம் மாதம் 30 ஆம் நாள் அகில உலகத் திருச்சபை மகுடதாரண வைபவமாகக் கொண்டாடுகிறது.

கடந்த நூறு ஆண்டுகளாக வானக றோஜா மலர்மழை பொழிந்து வரும் குழந்தை யேசுவின் சிறிய புஷ்பம் புனித தெரேசாவின் மகிழ்ச்சி வைபவத்தை எமது பங்குமக்களும் மற்றும் கிறிஸ்தவர்கள் அனைவரும் ஒன்றுகூடிக் கோலாகலமாகக் கொண்டாடுகிறார்கள்.

லிசி நகரில் அமைந்திருக்கும் இவரது பேராலயத்தில், அகில உலகின் பல்லாயிரவர் யாத்திரிகர்களாகச் சென்று திரண்டு இந்த ஆண்டு திருமுக தரிசனம் பெற்றுக் கொண்டேயிருக்கின்றார்கள். இவரைத் தேடி ஓடிச் செல்வோர் எல்லோரும் இகபர நன்மைகளும் ஆதரவும், அரவணைப்பும் ஆன்மீக ஈடேற்றமும் பெற்று அருள்பாலிக்கப் பெறுவதை அன்றும் இன்றும் கண்கூடாகக் காண்கின்றோம்.

பல்லாயிரக் கணக்கினரான மக்களின் ஆன்மாக்கள் பரகதியடையப் பரலோகத்திலிருந்து அருள் பாலிக்கும் காராணியாய் இவர் இயங்குகிறாரென்று வரலாறு மெய்ப்பிக்கின்றது. மேலும், மறைபரப்பின் இறைபணியாளர் இவரது வேண்டுதலாலும் பரிவுரையாலும், நிறைவாழ்வு பெற்று இறைபதமகிமையின் பங்காளிகளாகப் பேரின்பவாழ்வு பெற்றிருப்பதற்குப் பல சான்றுகளுமுண்டு.

வேத போத நாடுகளின் பாதுகாவலர்கள் இருவரில் ஒருவரான இப் புனிதை திருச்சபையிலும் ஞானவாழ்விலும் தெய்வீக புரட்சியை ஏற்படுத்தியுள்ளார்.

சிறு குழந்தைகளுக்குரிய உரிமையுடனும், பாசத்துடனும் அணுகி இவரோடு எளிதாகவும், ஆழமாகவும் உறவாடலாம். எமது உன்னத ஞான வாழ்வை உருவாக்கலாம், இவரது போதனைகளும் சாதனைகளும் எமக்கு நல்வழிகாட்டும் என இறைத் தந்தையவர்கள் புனித தெரேசாவின் தூய வாழ்வைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே இப் பூசிதவைபவமானது இறையன்பில் நாம் அபரிமிதமான வளர்ச்சி பெறவும், இவரது ஆன்ம தாகத்திற்கு எமது பங்களிப்பின் மூலம் உறுதுணையளிக்கவும், பணியாற்றவும், இன்னல்கள் நிறைந்த இன்றைய சூழ்நிலையில் அமைதியும் சாந்தியும் அருளவும் வேண்டுகிறேன். எமது பங்கு மக்கள் அனைவரையும் இதயபூர்வமாக வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.

பங்குத் தந்தை
**அருள்திரு. ஜே. பி. ஈ. செல்வராசா**
(குரு முதல்வர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித திரேசம்மாள் ஆலய திருவிழா

## குழந்தை யேசுவின் சிறியபுஸ்பம் புனித திரேசம்மாள் விண்ணக மகிமை பெற்ற 100ம் ஆண்டு விழா

யாழ் நகரப்பங்குகளில் மிகவும் இளைய பங்காகிய றக்கா வீதியில் அமைந்திருக்கும் குழந்தை யேசுவின் சிறிய புஸ்பம் புனித திரேசம்மாளின் விண்ணக மகிமை பெற்ற 100ம் ஆண்டு விழாவை பெருமகிழ்வுடன் கொண்டாடும் அகில உலக திருச்சபையுடன் இணைந்து நாமும் விழா எடுக்கவிரும்புகிறோம்.

மறைபரப்புப்பணியின் பரலோக இரு பாதுகாவலரில் ஒருவரான எங்கள் புனிதையின் பாதுகாவலில் இயங்கும் நாடுகளில் எமது நாடும் இடம்பெறுகிறது. எனவே முக்கியத்துவம் வாய்ந்த இவ்விழாவை யாழ். பங்குகள் அனைத்தும் இணைந்து கொண்டாடுவது அர்த்தமுள்ள தொடர் வழிபாடாக அமைகிறது. அந்த வகையில் யாழ் பங்குகளின் பங்களிப்பைப் பெற்று பின் வரும் தினங்களில் எம்மக்களோடு இணைந்து வழிபாடு நடத்துமாறு அனைவரையும் பணிவன்புடன் அழைக்கின்றோம். இயலுமானவர்கள் வருகைதந்து யாழ் மக்களின் கூட்டு வழிபாட்டை சிறப்பிக்க அன்புடன் வேண்டுகிறோம்.

### பங்குகள் பங்கு பற்றும் தினங்கள்

**19-09-97 வெள்ளி**

புனித ஆசிர்வாதப்பர் பங்கு

" நீர் கடவுளின் மகன், மெசியா"

இசை 61, 1-3 லூக் 9. 18-21

**20-09-97 சனி**

அடைக்கல அன்னை பங்கு

" ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள் "

1 கொரி 13, 1-8, 13 அரு 13, 31-35

**21-09-97 ஞாயிறு**

புனித திருமுழுக்கு அருளப்பர் பங்கு

" உண்மையை எடுத்துரைபதே என்பணி "

யாசப்பர் 3.13—18 அரு 18. 33—37

**22-09-97 திங்கள்**

புனித அந்தோனியார் பங்கு பாஷையூர்
புனித அன்னம்மாள் பங்கு பாண்டியன்தாழ்வு

" நன்மைகளால் தீமையை வெல்லுங்கள் "

உரோ 12.9—21 மத் 6.38—48

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித யாசுப்பர் பங்கு

**23-09-97**
**செவ்வாய்**

"நானும் தீர்ப்பிடேன்; இனி பாவஞ்செய்யாதே போ"

(விடுதலை வாழ்வு) *கலாத் 4.22—31 அரு 8.3—11*

யாழ் மரியன்னை பேராலய பங்கு

**24-09-97**
**புதன்**

"விண்ணரசு எதற்கு ஒப்பாகும்"

*யாத் 32 15—20;30—34 மத் 13.31—35:44—46*

சகல துறவற சகோதர சகோதரிகள்
குருத்துவ மாணவர்கள்

**25-09-97**
**வியாழன்**

" எனக்கு என்ன கிடைக்கும் "

*ஆதி 13.14—18 மத் 19 25 30*

புனித திரேசம்மாள் பங்கு

**26-09-97**
**வெள்ளி**

"நீங்கள் கிறீஸ்துவை ஆடையாக அணிந்திருக்கிறீர்கள்"

(மனமாற்றமும் பாவ மன்னிப்பும்) *கொலோ 3.1—11 லூக் 19.1—10*

பொது வழிபாடு — நற்கருணை விழா

**27-09-97**
**சனி**

நற்கருணை விருந்து - இறை மனித - உறவின் சின்னமும், சவாலும்

*2 அர 4 42—44 லூக் 22 17—20 அரு6 1—15*

**28-09-97** புனித திரேசம்மாள் பெருவிழா

**ஞாயிறு**

மேதகு. யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் கூட்டு திருப்பலி இடம் பெறும்

குறிப்பு :-

★ நவநாள் தினங்களை அமல மரித்தியாகிகள் நடத்துவார்கள்

★ *தினமும் மாலை 5.00 மணிக்கு (இலங்கை நேரம்) வழிபாடுகள் ஆரம்பமாகும்.*

★ 27 ம் திகதி நற்கருணை விழா மாலை 4.30 மணிக்கு (இலங்கை நேரம்) ஆரம்பமாகும்.

சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

பங்குத் தந்தையும்
பங்கு மக்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலர் அறிக்கை

குழந்தை யேசுவின் சிறிய புஷ்பம் என்றழைக்கப்படும் வேத போதக நாடுகளின் பாதுகாவலியாம் புனித திரேசம்மாவின் விண்ணுலக வாழ்வின் 100-ம் ஆண்டாகிய இவ் 1997-ம் ஆண்டில் இந்த நினைவு மலரை வெளியிடுவதிற் பங்கு மக்களுடன் இணைந்து பெருமகிழ்ச்சியடைகின்றேன். புனிதையின் யூபிலி விழாவாக அமையும் இவ்வருட ஆலயப்பெருவிழா பக்தி ஆர்வத்துடன் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

யாழ்ப்பாணம் நக்காவீதியில் புனித திரேசாவின் ஆலயம் அமைந்திருக்கிறது. கடந்த / சமகால பயங்கர நிகழ்வுகள் மத்தியிலும் எமது பாதுகாவலி எம்மைத் தன தரவணைப்பில் வைத்துப் பாதுகாத்துவருகின்றாள். ஆண்டு தோறும் இவ் ஆலயத்தில் ஐப்பசி 1 ம் திகதி புனிதையின் பெருவிழா கொண்டாடப்படுகின்றது. வாரந் தோறும் ஞாயிறு காலையும் வெள்ளிமாலையும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுகின்றது. பங்கின் சிறுவர்களுக்கு ஞாயிறு திருப்பலிக்குப் பின் மறைக்கல்வியும் போதிக்கப்படுகின்றது. மேலும் திருச்சபையின் யூபிலி ஆண்டையொட்டிய பயணத்தில் யேசுக் கிறிஸ்து, பரிசுத்த ஆவி, பரமதந்தையை நினைவு கூரும் இந்நாள்களில், இவ்வாண்டில் கிறிஸ்துவை மேன்மேலும் அறிந்து அவரில் ஐக்கியமாகிட வழிபாடுகள், பக்தி முயற்சிகள் சிறப்புடன் நடைபெற்று வருகின்றன.

யாழ் மாவட்ட குருமுதல்வராகவும், எமது பங்குத் தந்தையாகவும் பணி புரிந்து வரும் அருள்திரு J. P. E. செல்வராஜா அடிகளார் எமது ஆலய வளர்ச்சிக்காகவும் பங்கு மக்களின் ஞான வாழ்வின் மேம்பாட்டுக்காகவும் அரும்பாடுபட்டுழைத்து வரும் அதே வேளையில் இறைபக்தி அன்பு தாழ்ச்சி முதலிய நற்பண்புகளைக் கொண்ட முன் மாதிரிகையால் பங்கு மக்களுக்கு ஒரு நல் வழிகாட்டியாகவும் விளங்குகின்றார். ஆலயமமைத்த காலம் தொட்டு கார்மேல் சபைக் கன்னியர்கள் எமக்கு உறுதுணையாக இருந்து சேவை புரிந்து வருகிறார்கள். இவ்வரிசையில் தற்சமயம் பொறுப்பேற்றிருக்கும் அருட்சகோதரி கத்தறீன் ஜோர்ச் தனது பணிகளைக் கடமையுணர்ச்சியுடன் சிறப்புற ஆற்றிவருகின்றார். எமது சகோதரப்பங்கான புனித புவானியார் ஆலய மக்கள் சகலவிதத்திலும் எமக்கு ஒத்துழைப்பளித்து வருகின்றார்கள்.

எமதாலய அமைப்புக்காக, வளர்ச்சிக்காக உழைத்து இறைபதம் சேர்ந்துள்ள அனைவரையும் நன்றியுடன் நினைவு கூருகின்றேன். ஆலய வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டுத் தற்சமயம் வெளி மாவட்டங்களிலும் இங்கும் சேவை புரியும் ஆயர்கள் குருக்கள் கன்னியர்களுக்கும் வெளியூர்களில் வாழும் எம் பங்கு மக்களுக்கும் எமது நன்றிகள் பலபல. மன்னார் ஆயர் பேரருள்திரு கலாநிதி இராயப்பு யோசெவ் ஆண்டகை பங்குக் குருவாகப் பணிபுரிந்த பொழுது எமதாலய வளர்ச்சிக்காக ஆற்றிய அளப்பரிய சேவைகள் எமது விசேட பாராட்டுக்குரியவை. முன்பு ஒரே நிர்வாகத்தின் கீழ் எம்முடன் இணைந்திருந்த புனித ஆசீர்வாதப்பர் பங்கு எமக்களித்த ஒத்துழைப்புக்கும் எமது நன்றிகள்.

புனித திரேசாவின் விண்ணக மகிமை பெற்ற நூற்றாண்டைக் கொண்டாடும் இவ்வேளையில் எம் பங்கு வாழ்மக்கள் புனிதை வாழ்ந்து காட்டிய சிறிய வழிகளைப் பின்பற்றி கிறிஸ்துவுக்கு உகந்தவர்களாக, பரிசுத்தராக வாழவும், பங்கில் வாழ்ந்து உயிர்நீத்தோர் புனிதையின் பரிந்துரை மூலம் விண்ணரசைப் பெற்று மகிழவும் இறைவனை இறைஞ்சுகின்றேன்.

இந்த நினைவு மலரை உருவாக்க உழைத்தவர்களுக்கும், சிறப்பிக்க ஆக்கங்கள் தந்துதவியவர்களுக்கும், நிதியுதவி அளித்து வாழ்த்திய வணிகப் பெருமக்களுக்கும், எந்நேரத்திலும் உதவியும் ஊக்கமும் அளித்த எம் பங்கு மக்களுக்கும் நலன் விரும்பிகளுக்கும், உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**J. A. மரியதாசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமலர் யார்?

# சிறுவழி எது?

**1873** யனவரி 2-ம் நாள். பிரான்ஸ் நாட்டிலே, அலென்சோன் என்ற ஊரிலே ஒரு குழந்தை பிறந்தது. இல்லத்தை மகிழ்விக்க வந்த அந்த ஒன்பதாவது குழந்தைக்கு மரிய பிரன்சுவா திரேஸ் மாட்டின் என்று பெயரிட்டனர். விரைவிலே அந்தச் சிறு குழந்தை உலக முழுவதும் நறுமணம் பரப்பும் சிறு மலராக விளங்கப் போவது என்று ஒருவருக்கும் தெரியாது.

திரேஸ் உதித்தது உத்தமமான கத்தோலிக்கக் குடும்பத்தில். அங்கு யேசு நேசச் செல்வம் மிகுந்திருந்தது. இளமை முதலே குழந்தைகள் இறையன்பில் வளர்ந்தனர். சிறு வயதிலேயே இரண்டு ஆண்களும், இரு பெண்களும் இறைவனடி சேர்ந்தனர். மிகுதியானவர்கள் ஐந்து பெண்கள் அவர்களும் ஒருவர்பின் ஒருவராகக் கன்னியர் மடம் புகுந்தனர்.

திரேஸ் பதினைந்து வயதிலேயே கார்மேல் மடம் சேர விரும்பினாள். உலகை மறந்து, நான்கு சுவர்களின் மத்தியிலே சிறைப்பட்டு, கடவுள் தியானத்திலும் உடல் ஒறுத்தலிலும் வாழ்நாளை முழுவதும் செலவிடுவது என்பது ஒரு சிறுமியால் தாங்கக் கூடியதா? பல தடைகள் ஏற்பட்டன. சிறுமி தயங்கவில்லை. உரோமாபுரி சென்று, பரிசுத்த பாப்புவிடமே அனுமதி கோரி மன்றாடினாள்.

இறுதியாக கார்மேல் மடம் புகுந்தாள். "குழந்தை யேசுவினுடையவும், திருமுகத்தினுடையவும் திரேசாள்'' எனப் பெயர் பூண்டாள். ஒன்பது ஆண்டுகள்தான் கார்மேல் துறவியாக வாழ்ந்தாள். இருபத்து நான்கு வயது எழில் மங்கையாக இறைவனிடம் சென்றாள். அவளது துறவு வாழ்க்கையில், மடத்துத் தலைவியின் கட்டளைக்கிணங்க தன் வாழ்க்கை வரலாற்றை எழுதினாள். "ஓர் ஆன்மாவின் வரலாறு" என அதற்கு அழகுப் பெயர் சூட்டினாள். தன் ஆன்மாவின் உள்ளாந்தரத்தில் நிகழ்ந்த அருளின் ஓட்டத்தை, இறைவன் அளித்த ஆறுதல்களை, இறைவனை நாடி ஆன்மா கொண்ட வேட்கையை, ஆன்ம அன்பரின் பிரிவால் கண்ட வறட்சியை எல்லாம் அப்படியே எழுதிவைத்தாள்.

ஒரு கார்மேல் துறவி இறந்ததும், அவரது வாழ்க்கைச் சுருக்கத்தை அச்சிட்டு ஏனைய கார்மேல் மடங்களுக்கு அனுப்புவது வழக்கம். திரேசாள் இறந்ததும், அவள் எழுதியதன் வரலாற்றையே அச்சிடவிரும்பினர். திரேசாள் இறந்து ஓர் ஆண்டு ஆனதும்—1898 அக்டோபர் திங்களில் "ஓர் ஆன்மாவின் வரலாறு'' பிரசுரமானது. இரண்டாயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டன. என்று கேள்வியுற்றதும், ஒரு கன்னியர் "இரண்டாயிரமா? ஐயோ, நிறையப் பிரதிகள் மிஞ்சிவிடுமே! என்ன செய்வது?'' என்று அங்கலாய்த்தார்.

நடந்தது என்ன? பிரதிகள் மடத்துக்கு மடம் சென்றன. வாசித்தவர் எல்லோரும் தங்கள் ஆன்மாவில் ஓர் உன்னத கிளர்ச்சியைக் கண்டனர். வாசித்து முடிந்ததும் புத்தகத்தை நண்பர்களுக்கு அனுப்பிவைத்தனர். பதினோராம் பத்திநாதர் பாப்பரசர் கூறியதுபோல் "அதன் நறுமணம் கிறிஸ்தவ நெறியிலிருந்து வழுவியவரின் இதயங்களையே ஊடுருவியது. அதை வாசித்தவர்

களிற் பலர் மனம்திரும்பி, கிறிஸ்த்துவின் அன்பில் நிலைத்தனர்.'' திரேசாள் ஒரு புனிதவதி எனப் பிரகடனம் செய்யப்படு முன்னரே, நான்கு இலட்சம் பிரதிகள் அச்சிடப்பட்டன. இன்றுவரை சுமார் மூன்று கோடி பிரதிகள் அச்சிடப்பட்டுள்ளன.

உலகத்தின் கண்களிற் படாமல், மடத்தின் மதில்களுக்குள் அடங்கிவாழ்ந்த ஓர் இளமங்கை திடீரென உலகப்புகழ் பெற்ற தின் இரகசியம் என்ன ? மரித்த இருபத்தெட்டே ஆண்டுகளில், அவளது நான்கு அக்காமாரும் இன்னும் உயிரோடிருந்த போதே புனிதர் பட்டம் பெற்று ''உரோசா மலர் தூவும் சிறுமலர், கைவிடப்பட்டோரைக் கைநெகிழாக் கன்னி'' என்றெல்லாம் உலகமே ஏற்றிப்புகழ்பாடும் அளவுக்கு இந்தக் கன்னியர் திலகம் ஆற்றிய அரும் செயல்தான் என்ன?

''எனது புனிதவதி'' ''எனக்கு வழி காட்டும் விண் மீன்'' என்று உரிமை பாராட்டிய 11 ஆம் பத்திநாதர் பாப்பரசர் ''எல்லா விசுவாசிகளும் இந்தப் புனிதவதியின் வாழ்க்கையைக் கவனித்து, அவளைப் பின்பற்றி சிறு பிள்ளைகளைப் போல் ஆகவேண்டும். இல்லாவிடில், நமது ஆண்டவர் கூறியது போற் பரலோக இராச்சியத்தினுள் நுழைய முடியாது. இப்படிக் குழந்தைக்குரிய விதத்தில் ஆன்ம வாழ்க்கை அமைந்தால், மனித குலமே எளிதிற் சீர் திருந்துவது உறுதி'' எனத் துணிந்து உரைத்தார்.

புனித திரேசாளை எண்ணுந்தோறும், அவளது பூசைப் பலியில் வாசிக்கப்படும் நற்செய்தி நிகழ்ச்சி நமது கண்களின் முன் நிற்க வேண்டும். ''யேசு, ஒரு குழந்தையை அழைத்து, அவர்கள் நடுவில் நிறுத்தி, கூறியதாவது: உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் குழந்தைகளாக மாறாவிடில், விண்ணரசில் நுழைய மாட்டீர்கள்'' (மத் 2–3) இதுதான் திரேசாளின் வாழ்க்கை நெறியாக அமைந்தது. ஞான முயற்சிகளில் தான் முன்னேறிய செம்மைப் பாதைக்கு ''சிறிய வழி'' என்ற செல்லப்பெயர் கொடுத்தாள்'

'சிறிய வழி' பற்றி அவளே பல முறை எழுதியிருக்கிறாள். ''உத்தமமனத்தை அடைவதில் ஏற்படக் கூடிய தடைகளைப் பற்றியும் இன்னல்களைப்பற்றியும் விரிவாகக் கூறும் ஞான நூல்களைப் படித்த போதெல்லாம், என் சிற்றறிவுகளைப் புற்றது. என் தலையைச் சுழற்றி இதயத்தைத் தளரச்செய்த அந்தப் பெரும் புத்தகத்தை மூடிவிட்டு, உடனே பரிசுத்த வேதாகமத்தை எடுத்து வாசிப்பேன். உடனே என் புத்தி தெளிவுறும். ஒரே ஒரு சொல்லில்: நாம் ஒன்றுமே இல்லை என்பதை உணர்ந்து, இறைவனின் கரங்களில் ஒரு சிறு குழந்தையென நம்மையே கையளித்து விட்டால், அதுவே போதுமானது என்பதை உணருகிறேன்.''

சிறுமலர் திரேசாள் வேதாகம மொழிகளிலிருந்தே தனது சிறிய வழிக்கு வேண்டிய ஆற்றலைப் பெற்றாள். கடவுள் நம் பரலோக தந்தை. ''பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே,'' எனச் செபிக்கும் அவள் அவருடைய சிறு புதல்வி. இயற்கையில் ஒரு சிறு குழந்தை தன் தாயிடம் எவ்வாறு நடந்து கொள்ளுமோ, அவ்வாறே ஞான வாழ்வில் அவள் தன் வானுறைத் தந்தையோடு நடந்து கொள்வாள். சிறிய வழியின் சுருக்கம் இதுவே. இது தான் அவளது அப்போஸ்தலிக்க வேத போதகம்.

ஓர் ஆன்மாவின் சிறுமைதான் என்ன? அதுவே தாழ்ச்சி. நாம் யார்? கடவுள் யார்? நமது பரலோக தந்தையை எத்துணை சார்ந்திருக்கிறோம்? அவர் இன்றி எத்துணை ஆற்றல் அற்றவர்களாய், ஏன் ஒன்றுமில்லாமையாய் இருக்கிறோமென்று தெளிவுடன் அறிய உதவும் புண்ணியமே தாழ்ச்சி. ஆனால், தான் சிறுமலர் திரேசாள் தாழ்ச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியை அத்துணை விரும்பினாள்; மற்றவை களுக்கு மேலாத் அதைத் தெரிந்து கொண்டாள். தாழ்ச்சி அவளது சிறிய வழிக்கு இன்றியமையாத அடித்தளம். தாழ்ச்சி வலிமையற்ற ஒரு புண்ணியமன்று: உண்மையிலேயேமிகமிக வல்லமையுள்ளது அது ஏனெனில் தாழ்ச்சியே ஆன்மாவை அருள் வளத்திற்குத் திறந்துவிடும் திறவுகோல். நமது தூய மரியன்னை 'அருள் நிறைந்திருந்தாள்' காரணம்? அவள் தாழ்ச்சி மிகுந்தவளாய் இருந்தாள் -- சிறுமலர் திரேசாள் தாழ்ச்சியுற்றவளும், வலுவற்றவளுமாயிருந்தாள். இப்பொழுது விண்ணரசிற் புனிதையாகத் திகழுகின்றாள்.

சிறுமலர் திரேசாவின் சிறியவழியில் எப்போதும் 'மரியாயின் வழியாக யேசுவிடம்' Ad. (Jesum per Mariam) என்பதே முறை. திரேசாள் நோய்வாய்ப்பட்டாள். 1897–ம் ஆண்டு யூன் மாதம் 5-ம் நாள் தேவதாய்க்கு நவநாள் தொடங்கினார்கள் அவள் சிறுமியாக இருந்தபொழுது அற்புதமாக உடல் நலம் அளித்த அந்த அன்பு அன்னை எப்போதும் நலம் தருவாள் என்று எண்ணினார்கள் ஆனால் இம்முறை அவள் புதுமைசெய்யவில்லை. ''கன்னித்தாயை நான் எவ்வளவோ நேசிக்கிறேன்! நான் ஒரு குருவானவராய் இருந்தால், எத்துணை அன்புடன் அவளது புகழைப்பாடியிருப்பேன். அந்த அன்புத்தாயின் வாழ்வு எத்துணை எளியது'' என்றாள்.

1897-ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 11-ம் நாள் திரேசாள் சிறிது குணமடைந்தாள். அன்று உரோசா மலர்களைக் கொண்டு இரு சிறு முடிகளைப் பின்னினாள். ஒன்றைக் கன்னிமரி அன்னையின் அடிகளில் வைத்தாள்; ஒன்றை அவளது கைகளில் வைத்தாள். செப்ரம்பர் 30-ம் நாள். பல வாரங்கள் அசைய முடியாதிருந்தவள், அன்று பிற்பகல் 2–30 மணிக்கு தானாகப் படுக்கையில் எழுந்து அமர்ந்தாள். ''என் இறைவா. உமது சித்தம் எதுவானாலும் நிறைவேறட்டும். ஆனால், என்மீது இரக்கமாயிரும். அன்புள்ள கன்னித்தாயே, எனக்கு உதவியாக வாரும்'' என்று மொழிந்தாள். மூன்று மணிக்கு மடத்துத் தலைவி மரியன்னையின் படம் ஒன்றை அவள் மடியில் வைத்தாள். ஒரு வினாடி அப்படத்தை உற்று நோக்கியபின்: ''என்னை விரைவிற் கன்னித்தாயிடம் ஒப்புக்கொடுங்கள். நான் நல்ல மரணம் அடைவதற்காக என்னை ஆயத்தம் செய்யுங்கள்'' என்றுரைத்தாள் ஆறு மணிக்கு மடத்தில் திரிகால மணி ஓசை கேட்டது. சிறுமலர் திரேசாள் மாதா படத்தை ஒருவித கவர்ச்சியுடன் உற்றுப் பார்த்தாள். ஒரு மணி நேரக் கடும் வேதனைக்குப்பின் 1897-ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 30-ம் திகதி வியாழக்கிழமை மாலை ஏழுமணிக்குப் பின் சிறுமலர் திரேசாள் தனது ஆன்மாவைத் தன் தந்தையாம் இறைவனிடம் ஒப்படைத்தாள்.

'' திரேஸ் தோழன் ''

(சுவாமி சி. இ. நி. குணசீலன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய புஸ்பம் புனித சின்னத் திரேசம்மாளின்
விண்ணக இறைவாழ்வில் நூற்றாண்டின் நிறைவு விழா மலருக்கு
எமது வாழ்த்துக்கள்

மீண்டும் யாழ்நகரில் ………

றேடியோ, ரீ. வி, டெக், மற்றும் சகலவிதமான எலக்றோனிக்
சாதனங்களைத் திருத்துவதிலும் விற்பனையிலும் முன்னோடி நிறுவனம்

RM ESTD: 1960 J.M.J

# றேடியோ மனுவல்

121, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

25 வருட விசேட நிபுணத்துவம் (SPECIALIST) பெற்றவர்களால்
ஸ்பீக்கர்கள் (SPEAKER) திருத்திக் கொடுக்கப்படும்
உங்கள் தேவையே எங்களின் சேவை

## RADIO MANUAL

121, STANLEY ROAD, JAFFNA.

---

★ தரமான போட்போஸ்ரற் பிரதிகள்

★ அடையாள அட்டை கவரிடுதல்

★ 58 வருட றைக்கிளீனர்ஸ்

இம் மூன்றும் இணைந்த சேவைகளை

ஒரே இடத்திற் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# சன்லைற் றைக்கிளினர்ஸ்

பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான ஐஸ்கிறீம் வகைகளை
எப்போதும் அளிப்பதுடன்
சிற்றுண்டிவகைகளையும் பெற்றுக்கொள்ள
எம்மை நாடுங்கள்

லிங்கன்
கிறீம் ஹவுஸ்

191, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

SHANMUGA
PHARMACY & GROCERY
PHOTOCOPYING LAMINATING
For Your Fastest Finest & Clearest Photocopy
With Enlargement & Reducation Facility
Contact

SHANMUGA

No. 65, (185) MAIN ST, JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்மேல் சபையின் நறுமண ரோஜா

திருச்சபை வரலாற்றில் முதன்மைக்கொரு மகுடம்; புனித மலர்கள் மலர்ந்த பூங்கா; செபதப தியான வாழ்வின் சுரங்கம் கார்மேல் சபை.

## கார்மேலின் பூர்வீகம்

புனித கார்மேல் மலைமீது இறைவாக்கினர் எலியாஸ் இஸ்ராயேல் மக்களுக்குப் பாவால் என்ற பொய்த் தெய்வத்தின் இறைவாக்கினர் முன்பாக உண்மைத்தெய்வம் "யாவே" என்பதை மெய்ப்பித்தார்.
(1 அர. 18; 39)

ஆழ்ந்த செப தியானத்தின் பின் மீண்டும் அம்மலைமீது மேகத்திரளின் மத்தியில் மரியாளின் திருவுருவைக்கண்டார். இக் காட்சியின் மாட்சிமை உணர்ந்த தபோதனர் சிலர் அம்மலைமீது கி. பி. 1155, இல் புனிதர் பேர்த்கோல்ட் தலைமையில் மரியாளின் நினைவாக ஒரு சிற்றாலயத்தை நிறுவினர். தியான வாழ்வின் திருக்கூட்டம் உதயமானது. இக்கூட்டத்தினர் 'கார்மேல் மாதாவின் அருட்சகோதரர்' என அழைக்கப்பட்டனர். அங்கத்தவர் பலர் பெருகச் சபை வளர்பிறையானது. பரிசுத்த பாப்பரசர் 4-ம் இனசன்ற் இச் சபைக்குத் திருச்சபையின் அங்கீகாரம் வழங்கினார்.

1251 ஆடித்திங்கள் புனிதர் சைமன் ஸ்டொக் தலைவராக இருந்தபோது அன்னை மரியாள் அவருக்குத் தரிசனையாகிக் கார்மேல் உத்தரியத்தைக் கையளித்துத் தம் அன்பையும் பாதுகாவலையும் உறுதிசெய்தார். சபையின் வளர்ச்சி துரிதமானது.

1451இல் முத்திப் பேறுபெற்ற ஜோன் சொரத் கார்மேல் கன்னியர் சபையொன்றைத் தாபித்தார். கன்னியர்க்கும் அன்னை மரியாளின் அன்பைப் பெறும் பாக்கியம் வாய்த்தது. கற்பு, தரித்திரம், கீழ்ப்படிவு என்னும் இலட்சிய நோக்கில் கன்னியர் சபை துரித மலர்ச்சி பெற்றது. புகழ் வாய்ந்த புனிதர்களான அவிலா தெரேசாள், சிலுவை அருளப்பர், சின்னத் தெரேசாள் என்போர் இச் சபையில் மலர்ந்த வாடா நறுமணப் பொன் மலர்களாவர்.

## கார்மேல்; அப்போஸ்தலிக்க கார்மேல்

சோஃபி என்னும் பெண்மணி அங்கிளிக்கன் சபையிற் பிறந்தவர், பெற்றார், உறவினர் உடன்பிறந்தார் எதிர்ப்பின் மத்தியில் கத்தோலிக்க மதத்தைத் தழுவினார், புனித வளனார் சபையிற் புகுந்து அச்சபையின் துறவியானார். மேரி வெரோணிக்கா என்னும் நாமஞ்சூட்டிக் கொண்டார், ஒரு நாள் யேசு அவருள்ளத்திற் பேசினார் "நீ கார்மேல் சபையில் சேரவேண்டுமென்பது என் விருப்பம்" என்றார். எப்போதும் அந்த வார்த்தைகள் எதிரொலித்த வண்ணமிருந்தன. திருச்சபை உயர் மட்டத்தின் அனுமதியோடு 1867 இல் கார்மேல் 2ம் சபைக் கன்னியானார்.

தியான மடங்களின் உள்ளே மௌன வாழ்வில் தவமியற்ற 2ம் சபைக் கன்னியர் வெளியே சென்று நற்செய்திப் பணியாற்ற 3ம் சபையொன்று உருவாக்கத் தீர்மானமாயிற்று. 1869 ல் மேரி வெரோணிக்கா பேயோன் (Bayon) எனுமிடத்தில் இன்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் ஊடே எதிர் நீச்சல் நீந்தி "அப் போஸ்தலிக்க கார்மேல்" சபையை அடியிட் டார். 1870இல் இந்தியாவில் மங்களூரிலும் 1923இல் வண பிதா எல் டுபொன்ற் என் பவரின் வேண்டுகோளின் படி திருகோண மலை, மட்டக்களப்பு நகர்களிலும் முதன் முதலாக இச்சபைகள் நிறுவப்பட்டன. இவை பெயரளவில் மாற்றம் பெற்றபோதிலும் கடமைகளிற் கார்மேல் சபையின் அங் கமாகவே இயங்கின.

## கார்மேல் புனிதை சின்னத் தெரேசாள்

கார்மேல் சபை ஈன்றெடுத்த கன்னி மலர், புனிதவெண்முத்து, மாணிக்க மணி விளக்கு உலகு போற்றும் உன்னத பொக் ஷம், உத்தமி, கற்பின் லீலிப் புஷ்பம், பாது காப்புக்கேடயம், பாதை காட்டும் கலங்கரை என்று பலவாறாகப் பாராட்டத்தகுந்த புனிதை சின்னத்தெரேசாள்.

கார்மேல் சபையின் ஞானத்தியானம் செப வாழ்வின் சிறப்பு, தவத்தின் மகத்து வம் எளிமையின் இனிமை என்பவற்றைால் இதயங்கவர்ச்சி கொண்டு ஈர்க்கப்பட்டார் சிறுமி தெரேசாள். அர்ப்பண வாழ்வின் பேரா னந்தம் அவருள்ளத்திற் சுடரெறிந்தது. உடன் பிறந்த மூத்த சகோதரிகள் மூவரின் தியாக வாழ்வின் அடிச்சுவட்டில் அவர் நடை பயின்றார். பாலப் பருவத்தின் பதினைந்தா வது வயதில் யேசுவின் உத்தம பத்தினியாய் மாசற்ற கன்னிகையாய் பாப்பரசரின் விசேட அனுமதியுடன் கார்மேல் சபையுட்கால் ஊன்றினார்.

இளஞ் சிறுமியான தெரேசா, மடத்தின் தாயார் சககன்னியர் புரிந்த அநாவசியமான குற்றங்களின் தண்டனைகளை அனுபவித் தார். இன்னல்கள் அனைத்தையும் நல் மனத்துடன் சகித்தார். சிலுவையிலே தொங் கும் யேசுவின் திருப்பாத கமலங்களில் தமது துயரங்களை நறுமண ரோஜா மலர் களாய்க் காணிக்கை வைத்தார்.

சின்னத் திரேசா தாழ்ச்சியின் நிறை குடம். எளிமையின் இருப்பிடம், இறை நம்பிக்கையின் கற்பாறை. செப தவ ஒறுத் தல் முயற்சிகளினால் பாவிகளை மனந் திருப் புவதில் கருணையூற்று. உயர் நற்பண்புகளே அவரது புனிதத்தன்மைக்கு ஊன்று கோலாய் உதவின.

"சிறு துளி பெருவெள்ளம்" என்பதற் கொப்ப அவரது சிறிய சிறிய செயல்களே அவர் மகிமைக்கும் புகழுக்கும் உரைகற்களா யின. "எனக்குக் கிடைக்கும் சிறு சந்தர்ப் பங்களை நழுவவிடாமல் என் ஒறுத்தல் முயற்சிகளுக்குப் பயன் படுத்துவேன்." என்பதே அவரது இதயகீதம் பரிசுத்த தனத் தின் மலைமீது என்னால் தனித்து ஏற முடியாது. யேசு என்னுடன் துணை நிற்பார் என்பது அவர் தம் தளராத நம்பிக்கைத்திரம்.

"வாழ்வில் எவ்வாறு இறையன்பிலும் பிறரன்பிலும் பற்றுக்கொண்டிருந்தேனோ அவ்வாறே இறந்த பின்னரும் பரலோகத் திலிருந்து ரோஜா மலர்மாரி மொழிவேன்" என்று வாக்களித்தார். இறைவனிடமிருந்து வரங்களைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் தன் வாக்கை இன்னும் மெய்ப்பிக்கின்றார்.

பொறுமையாலும், புனிதச் செயல்களா லும் அனுதின செப தப முயற்சிகளாலும் அன்பின் கொடையாலும் அநேகரை இறை வன் பால் திருப்பிய புனிதையின் பாதை யிலே நாமும் முன்னேறுவோம். இனிய நற் செயல்களை எம் வாழ்விற் கடைப்பிடிப் போம். எல்லோரும் வாழ எந்நாளும் பாடு படுவோம். பரித்தியாக முயற்சிகளை மணங் கமழும் ரோஜா மலர்களாக இயேசுவுக்கு அர்ப்பணிப்போம்.

அருட் சகோதரி ஜோஸ்மாறி A. C.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு பூ மலர்ந்தது பாரினில்

நவீனகால புனிதர்களுள் புனித சின்னத் திரேசம்மாளைப்போல் மக்கள் மனதில் இடம்பெற்று அவர்கள் வாழ்வில் செல்வாக்கு செலுத்திய புனிதர் வேறு ஒருவரும் இல்லை எனலாம். இவள் ''நவீனகால புனிதர்களுள் அதிசிறந்தவர்'' என புனித 10ம் பத்திநாதராற் புகழப்பட்டவர். இவளது ஆன்மீக நெறி விசுவாசிகள் கண்டுபாவிப்பதற்காக நான்கு பாப்புமார்களினால் விதந்துரைக்கப் பட்டுள்ளது. மரணித்து 28 ஆண்டுகளில் புனிதர்பட்டம் கிடைக்கப்பெற்றுத், திருச் சபையால் வேதபோதக நாடுகளின் பாது காவலருள் ஒருவராக மேன்மைப்படுத்தப் பட்ட புனித திரேசாளின் புனிதத்துவத் தின் இரகசியமென்ன? இத்தனைக்கும் அவள் வாழ்நாளிற் பெரும் புதுமைகளைச் செய் தவளோ, கடும் தவங்களை மேற்கொண்ட வளோ, பாரிய மறைப்பணிகளைப் புரிந்த வளோ அல்லள் ஒரு நூற்றாண்டுக்குமுன் பிரான்ஸ் நாட்டின் சிற்றூரொன்றில் எளிமையான குடும்பத்திலே பிறந்து, ஒன் பது ஆண்டுகள் கார்மேல் மடத்தில் மறை வாக வாழ்ந்து 24 வயதில் மரணமான ஓர் இளம் பெண் இந்நூற்றாண்டின் அதிசிறந்த, மக்கள் உள்ளம் கவர்ந்த புனிதையாகத் திகழ்வது மனித ரீதியில் விளக்கமுடியாத தொன்றாகும். இது இறையருளின் ஈடு இணையற்ற செயற்பாடென்றே கூறலாம்.

புனித திரேசம்மாளைப்பற்றி நாம் மிகுதியும் அறியக்கூடியதாயிருப்பது அவள் எழுதிவைத்த சுயசரிதை வாயிலாகவே இதிலிருந்து அவளது குடும்பம், குழந்தைப் பருவம், வாழ்க்கை நிகழ்ச்சிகள் பற்றி மட்டு மல்லாது அவளது உள்ளார்ந்த உணர்வுகள் சிந்தனைகளையும் அறியக்கூடியதாக இருக் கிறது.

1873-ம் ஆண்டு ஜூயி மாட்டின் என் பவருக்கு ஐந்தாவது பெண் குழந்தையாகப் பிறந்தவள் திரேஸ். நான்காவது வயதிலே அருமை அன்னையை இழந்தாள். அவளது மூத்த சகோதரிகள் மூவர் துறவற வாழ்வை மேற்கொண்டபின் திரேஸ் தானும் கார்மேல் மடத்திற் சேர விரும்பினாள். மிகுந்த சிரமத் தின் பின் ஆயரின் விசேட அனுமதி பெற்று 15 வது வயதில் திருமடத்திற் சேர்ந்தாள். 1890-ம் ஆண்டில் துறவற வாக்குத்தத்தம் செய்தாள். 1896-ம் ஆண்டு நோய்வாய்ப் பட்டு அடுத்த ஆண்டில் மரணமானாள். இதுதான் அவளது வரலாறு.

திரேசம்மாளின் இவ்வுலக வாழ்வு 24 ஆண்டுகள்தான் நீடித்ததெனினும் அவள் அற்பாயுளிற் போய்விட்டாள் என்றோ, அவள் வாழ்வு நிறைவுபெறவில்லை என்றோ நாம் கூறமுடியாது. ஏனெனில், தனது இக்குறுகிய வாழ்வில் ஆன்மீகத்தின் சிகரத் தையே எட்டிப்பிடித்துவிட்ட இணையற்ற புனிதை அவள்.

இப்புனித வாழ்வுக்கு அடியிட்டது அவளது குடும்பம் தாய் தந்தையர் இரு வருமே ஆழ்ந்த இறைப்பற்றுடையவர்களாய் இருந்தமையால் அவர்களுடைய குழந்தை களும் உலகச்சார்பில்லாமற் சூழ்ந்த ஆன் மீக தன்மையுடையவர்களாய் வளர்ந்தனர். அக்குடும்பத்தின் வாழ்வு திருச்சபை, குடும் பம், தொழில் என்ற வட்டத்துக்குள் அமைந்திருந்தது. அக்குடும்ப அங்கத்தவ ரிடையே நிலவிய ஆழ்ந்த அன்புறவை திரேசம்மாள் கூறும் நிகழ்ச்சிகளிற் காண லாம். கடைசிப்பிள்ளை என்றதால் திரே சம்மாளுக்கு எல்லோரது அன்பும் சற்று அதிகமாகவே கிடைத்தது. 4 வயதில் அருமை அன்னையை இழந்த அவள் தன் தமக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொவினை "இனி நீ தான் என் அம்மா" என்று அணைத்துக் கொள்ளுகிறாள். சகோதரிகள் ஐவரும் இணைபிரியாத் தோழிகள் போல் இருந்தனர். அதே சமயத்தில் மூத்தவர்கள் இளையவர்களின் கல்வி, வளர்ப்பு விடயங்களைக் கரிசனையுடன் கவனித்துவந்தனர். திரேஸ்மீது விசேட அன்புகொண்டிருந்த தந்தை அவளை 'இளவரசி'' என்று அழைப்பது வழக்கம். தந்தையை "பிரான்ஸ் நாட்டு மன்னர்" என வர்ணிக்கும் திரேஸின் வார்த்தைகளில் அவள் தந்தையிடம் கொண்டிருந்த அன்பும் மதிப்பும் வெளிப்படுகின்றன. ஆனால், இந்த நிறைவான மனித அன்பெல்லாம் அவர்களது இறையன்பின்முன் சூரியன்முன் மின்மினி போலாயிற்று. இயேசுவுக்காகத் தம் அன்புத் தந்தையைப் பிரிந்து செல்லப் புதல்வியர் தயங்கவில்லை. அவர்களை இறைவனுக்கு அர்ப்பணம் செய்யத் தந்தையும் பின்வாங்கவில்லை.

சிறுவயதிலே திரேஸ் தனது சகோதரிகளைவிடச் சற்று வித்தியாசமாக, துடிதுடிப்பும், புத்திக்கூர்மையும், தனித்துவமும் கொண்டவளாக இருந்ததாக அவளது தாயின் கடிதமொன்றிற் குறிப்பிடப்பட்டுள்ளது. சிறுபிள்ளைத் தனங்களோடு சேர்ந்தே வயதுக்கு மீறிய ஆன்மீக உணர்வும் அறிவும், திட உள்ளமும் அவளிடம் காணப்பட்டன. எதற்கும் பொய்சொல்லாத, கள்ளம் கபடமற்ற நேர்மை, பெருந்தன்மை, அவளுக்கு இயல்பாக அமைந்திருந்தன. இறைப்பற்றும் நற்செயல்களும் அவளுக்குக் கவர்ச்சிகரமாக இருந்தன. நல்ல புத்தகங்களை வாசிப்பது அவளுக்கு விருப்பமாக இருந்த போதிலும் தனிமையிலிருந்து ஆன்மீகவிடயங்களைப் பற்றி நீண்டநேரம் சிந்திப்பதுமுண்டு. ஆனால், அவள் ஒரு சாதாரண சிறுமிதான். தந்தையுடன் உலாவப் போவதிலும், பூக்களின் அழகிலும், பறவைகள் பட்டுப்பூச்சிகளை வளர்ப்பதிலும் அவள் குழந்தையுள்ளம் இன்பம் கண்டது. ஆனால் அவளது உள்ளத்தின் அடித்தளத்தில் நின்று அவளை முற்றும் ஆட்கொண்டிருந்தது இறைப்பற்றும் ஆன்மதாகமுமே.

அவளது இளமை வாழ்வில் நிகழ்ந்த சில சம்பவங்கள் அவளது உள்ளத்திற் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியதாகக் கூறுகின்றாள். அன்புத்தாயின் மரணம், பாடசாலைப் பருவத்தில் அவளுக்கு ஏற்பட்ட நோயும் அது குணமாகிய விதமும், அவளது முதல் நன்மை, அவளது சகோதரிகள் ஒவ்வொருவராகப் பிரிந்து சென்றது, இறுதியாக 1896 நத்தார்த் தினத்தன்று தந்தை கூறிய சில வார்த்தைகள்.

கடைசியாகக் கூறப்பட்ட நிகழ்ச்சி அவளது குழந்தைப்பருவத்துக்கு முற்றுப் புள்ளிவைத்தது. தாய் இறந்த போது தான் இழந்த மனத்திடத்தை அப்போது மீண்டும் பெற்றதாகக் கூறுகின்றாள். அதன்பின் அவளது ஆன்மீக வளர்ச்சி துரிதமாக நிகழ்ந்தது. பாவிகள் மனந்திரும்ப உழைக்க வேண்டுமென்ற தணியாத தாகம் அவளது செயல்களுக்கு உந்துசக்தியாக இருந்தது. தனது அழைப்பைத் தெளிவாக உணரலானாள். ஆனால், தன்மீது உயிரையே வைத்திருக்கும் தந்தையிடம் அதைக் கூறத் தயங்கினாள். ஆனால், எதிர்பார்த்ததற்கு மாறாக தந்தை இதனை இறைவன் தனக்கு அளித்த ஒரு பெருமையாகக் கருதி இத்தியாகத்தைச் செய்ய முன்வந்தார். ஆனால் சபையின் சிரேஷ்டரோ ஆயரோ இந்த இளம் வயதில் அவளை ஏற்க விரும்பவில்லை. திரேஸின் மனவுறுதி அவளை ரோமாபுரி சென்று பாப்பரசரிடமே அனுமதி கேட்கச் செய்தது. ஈற்றில் ஆயரின் அனுமதி பெற்று 15 வது வயதில் கார்மேல் மடத்தில் சேர்ந்தாள். இயேசுவிடம் தன்னைக் கையளித்த திரேஸ் மனநிறைவு பெற்றாள். அவளது இயல்பான பண்புகளும், சிறுபராய வாழ்வும் அவளது புதிய வாழ்க்கைக்கு உறுதுணையாயிருந்தன. துறவற வாழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்குக் கவர்ச்சியாக இருந்தபோதிலும் அவளுக்கு மனவேதனை தந்த விடயங்களும் இல்லாமலில்லை. இவற்றுள் முக்கியமானது தந்தையின் சுகவீனம். தனது புதல்வியரை வீரத்துடன் தியாகம் செய்த லூயி மாட்டினது இறுதி நாள்கள் மிகத் துன்பகரமானவையாக இருந்தன.

திரேசம்மாள் கடுமையான செபதபங்களைத் தேடி அனுசரிக்கவில்லை. பெரிய புனிதர்களின் அரும்பெரும் செயல்களை புண்ணிய வழிகளை நினைவுகூர்ந்தாள். ஆனால், அது தனக்குரிய வழி அன்று என்பதை உணர்ந்தாள். மாறாக தனது அன்றாட வாழ்வின் துன்ப துயரங்களை வரவேற்றாள். அவற்றை இறைவன் தனக்குத் தரும் கொடைகளாக விருப்புடன் ஏற்றுப் பாவிகள் மனந்திரும்ப ஒப்புக்கொடுத்தாள். ஆரம்பத்தில் அவை அவள் மனதுக்கு வேதனையைக் கொடுத்தன. எனினும், பின்பு அவற்றை மகிழ்ச்சியோடு வரவேற்கும் மனநிலை ஏற்பட்டது. பிறரது புகழ்ச்சியோ இகழ்ச்சியோ தன்னைப் பாதிக்காத ஒரு பற்றற்ற மனநிலை ஏற்பட்டது. எல்லாவற்றையும் இறைவனின் கையில் ஒப்படைத்துவிட்டுத் தன்னை ஒரு பயனற்ற கருவி என்று நினைப்பதே அவளுக்கு மனநிறைவைக் கொடுத்தது. தன்னிடம் நலம் ஏதும் இருந்தால் அது இறைவனின் இரக்கமே என மகிழ்கிறாள்.

மோட்சத்துக்கு ஓர் எளிய நேர்வழியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று நினைத்து அவள் கண்டுபிடித்த வழிதான் ஒரு குழந்தையின் எளிமையான அன்பு வழி "யேசு பிறரை எவ்வாறு அன்புசெய்கிறாரோ அதுபோல நாம் அவர்களை அன்புசெய்யவேண்டும். யேசு என்மூலமாக அவர்களை அன்புசெய்கிறார்" என்று கூறுகிறாள்.

இந்தப் பரந்த அன்பின் வழியாகத்தான் அவள் பாவிகளை மனந்திருப்பவும் மறைபோதகர்களுக்குத் துணைபுரியவும் முடிந்தது. தனது 24 வருட வாழ்வில் அதியுன்னத ஆன்மிக முதிர்ச்சியை அடைய முடிந்தது. தனது முதல் நன்மைத் தினத்திலே யேசுவைத் தன் காதலராக வரித்த நாள் முதல் தனது இறுதிமூச்சுவரை அவருக்காகவே வாழ்ந்தாள். அவருக்காகக் கற்பனைக்கடங்காத தியாகங்களையெல்லாம் செய்வதற்கு ஆயத்தமாயிருந்தாள். ஆனால், யேசு அவளிடம் கேட்டது ஒரு குழந்தையின் அன்பு. ஏனெனில் அவள் 20-ம் நூற்றாண்டு மக்களுக்கு ஒரு மேல்வரிச்சட்டமாக விளங்க வேண்டியவள்.

செல்வி வயலற் இம்மானுவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை யேசுவின் சிறியபுஸ்பம் புனித திரேசம்மாள் விண்ணக மகிமை பெற்ற 100ம் ஆண்டு ஞாபக மலருக்கு எமது ஸ்தாபன நிர்வாகிகளின் வாழ்த்துக்கள்

**சங்கு சக்கர இரும்பகம்**

- CIC பெயின் வகைகள்
- ஆணிவகைகள்
- மற்றும் கட்டட வேலைகளுக்குத் தேவையான அனைத்துப் பொருள்களும்

மொத்தமாகவும்

சில்லறையாவும்

பெற்றுக் கொள்ளலாம்.

# சங்கு சக்கரம் இரும்பகம்

113, ஸ்ரான்லி றோட்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வளர்ச்சிப் பணியில் வரலாறு காணும்

# யாழ் புனித சின்னத் திரேசம்மாள் ஆலயம்

இலங்கை மாதாவின் மணிமுடியாக விளங்கும் யாழ்ப்பாண மாநகரில் சுண்டிக்குளிப் பதியிலே எழுந்தருளியிருக்கும் புனிதர்களின் ஆலய வரிசையில் புனித சின்னத் திரேசம்மாளின் ஆலய வரலாற்றினை, இன்று அவளது விண்ணக வாழ்வின் நூற்றாண்டில் மீண்டும் மீண்டும் ஒரு முறை புரட்டித் திருப்பிப் பார்ப்பது சாலப் பொருத்தமானது என நினைக்கிறேன்.

**முதல் ஆலயம்:**

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அந்நிய மதத்தவர்களாற் பல கத்தோலிக்க ஆலயங்கள் அழிக்கப்பட்டும், பறிமுதல் செய்யப்பட்டும் வந்ததை வரலாற்றில் அறிகிறோம். இவ்வாறு அழிக்கப்பட்ட ஆலயங்களில் முதற் சொரூபம் வைக்கப்பட்ட திவ்வியா தெருவில் இருந்த ஆலயமும் ஒன்றாகும். இவ்வேளையில் தான் 1945 கால கட்டத்தில் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அ. ம. தி என்பவரால் புனித சின்னத் திரேசம்மாளின் சொரூபத்தினை எடுத்து வந்து தற்போது கோவில் பக்கமாக உள்ள புனித யோன் பொஸ்கோ பாலர் பாடசாலையில் (Nursery) வைத்து வழிபாடு செய்யப்பட்டது. அதுவே 1969 காலப் பகுதியில் டொன்பொஸ்கோ ஆலயம் என அழைக்கப்பட்டது. இது சிற்றாலயமாக இருந்ததுடன் போதிய வசதிகள் இன்றியும் காணப்பட்டதால் 1974ம் ஆண்டு பங்குனித் திங்கள் றக்கா வீதியில் ஆலயம் அமைப்பதற்காக ஒரு காணியினை இளைப்பாறிய யாழ். ஆயர் அதிவண பேரருள் திரு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் வாங்கப்பட்டது.

**சிறு குடில் ஆலயம்:**

1974ம் ஆண்டு ஆலய பரிபாலகராக நியமனம் பெற்றவரும் தற்போதைய யாழ் மக்களின் வசதிக்கேற்றவாறு இச் சிறு மறை மாவட்ட ஆயருமான அதிவண. பேரருள்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் சிறு குடில் அமைக்கப்பட்டு வழிபாடுகள் நடாத்தப்பட்டன. குடிலானது இரு இடங்களில் மாறி மாறி அமைக்கப்பட்டன. இங்கு பல அசௌகரியங்களைக் காலத்துக்கு காலம் பெறவேண்டிய தொரு சூழ்நிலை ஏற்பட்டது.

இவரைத் தொடர்ந்து பணியாற்ற 1979ம் ஆண்டு ஆலயப் பரிபாலகராக முன்னாள் மறைக்கல்வி இயக்குனரும் தற்போதைய பெரிய குருமட அதிபருமான அருள்திரு. J. நிக்கிலஸ் அடிகளார் நியமனம் பெற்றார். இவரும் தமது மறைக்கல்விப் பணிகளுடன் பல்வேறு சிரமங்கள் மத்தியிலும் அச்சிறு குடிலிலே மாற்றங்களை ஏற்படுத்தி வழிபாடுகளைச் சிறப்பாகவும் திறமையாகவும் வழி நடாத்தி வந்தனர்.

**இன்றைய ஆலயம்:**

தற்போதைய திருமலை – மட்டுநகர் ஆயரும் 1981ம் ஆண்டு குறுகிய கால இறைபணிக்காக ஆலயப் பங்குப் பரிபாலகராக நியமனம் பெற்ற அதிவண. பேரருள் திரு. யோ. கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களின் தலைமையில் இச் சுற்றாடலில் வாழும் கிறிஸ்தவர்களுக்கு என நிரந்தர ஆலயம் அமைக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் மக்களால் திரட்டப்பட்ட பெரும் நிதியினைக் கொண்டும் வள்ளல் பெருந் தகைகளின் நன்கொடைகளைக் கொண்டும் ஆலயத்துக்கான அடிக்கல் யாழ். ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களால் இடப்பட்டு கட்டட வேலைகள் இவ்வூரிலே வாழ்ந்த கட்டட ஒப்பந்தகாரர்கள் திரு. யோசவ்மணி, திரு டனிசியஸ் (சின்னத்தம்பி), திரு. எலியாஸ் என்பவர்களாற் கட்டப்பட்டுக்கூரை போடப்பட்டு ஆலயமாக வடிவமைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்கின் ஒரு துணைப்பங்கு:

1981ம் ஆண்டு மாசி மாதம் 15ம் திகதி சுண்டுக்குளிப் பங்கு மீண்டும் யாழ். பேராலயப் பங்கிலிருந்து பிரிக்கப்பட்டு யாழ். ஆயர் அவர்களால் தனிப்பங்காக இயங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இப்பங்கின் தலைமைப்பங்கு ஆலயமான புனித யுவானியார் ஆலயமும் அருணி இற் புனித திரேசம்மாள் ஆலயம், புனித ஆசிர்வாதப்பர் ஆலயம் என்பனவும் ஒரே பங்குத்தந்தையின் கீழ் நிர்வகிக்கப்பட்டன. இதன் முதல் பங்குத்தந்தையாக அருள்திரு சாள்ஸ் குணம் செந்தில்வேல் அ. ம. தி அடிகள் நியமனம் பெற்றார். ஆலயத்தின் பங்குப்பணிகளுடன் கடின உழைப்பிற்கும் மத்தியிற் பல்வேறு திருத்தங்களை மேற் கொண்டு மக்களை வழிநடாத்திச் சென் றார்.

இன்றைய வளர்ச்சிப் பாதையில்:

1985ம் ஆண்டு மாசி மாதம் பங்குத் தந்தையாகத் தற்போதைய மன்னார் மறை மாவட்டத்தின் ஆயராக நியமனம் பெற்ற அதிவண. பேரருள்திரு. கலாநிதி. இராயப்பு யோசவ் D. C. L (Rome) ஆண்டகை அவர்கள் பொறுப் பேற்றுக் கொண்டார். அறிவுச் செறிவும், பல்கலை உயர்வும் அயராத உழைப்பும் அயலவர்களின் வாழ் வில் அக்கறையும் கொண்ட இவ் அருட்குரவ ரின் உள்ளத்தில் எழுந்த எண்ணங்கள் செயல் வடிவங்களாக உருப்பெறத் தொடங்கின.

ஆலயத்தின் ஆரம்பத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்ட வழிபாடுகளில் மாற் றங்கள் ஏற்படுத்தப்பட்டன. மூன்று நாள் கள் மட்டும் கொண்டாடப்பட்ட நவநாள் ஆராதனைகள் ஆறுநாள்களாக அதிகரிக்கப் பட்டன. சிறந்த அருட் குரவர்களால் மறையுரைகள் ஆற்றப்பட்டு திருவிழாக்கள் பெருவிழாவாகச்சிறப்பு பெற்றன. தவக்கால வழிபாடுகள், பக்தி முயற்சிகள் பயபக்தி யாக நடாத்தப்பட்டன. ஞாயிறு, வியாழன் ஆகிய இரு தினங்களில் திருப்பலிகள் நிறைவேற்றப்பட்டன.

கல்லும் முள்ளும் கரடும் முரடுமான ஆலய வளவு செப்பனிடப்பட்டு பாலை வனமாக இருந்த காணியினை விலைமதிப்பு டைய மரங்கள் நடப்பட்டு அதனை சோலைவனமாக ஆக்கிய பெருமை அவரையே சாரும். நான்கு பக்கச் சுற்று மதில் கட்டப்பட்டு கதவும் (Gate) போடப் பட்டது.

1987ம் ஆண்டு அமைதி என்ற போர்வையில் இலங்கை வந்த இந்தியப்படை யினர் மேற்கொண்ட தாக்குதலுக்கு ஆலயம் இலக்கானது. மீண்டும் அதனைத் திருத்திப் புனர்நிர்மாணம் செய்து வைத்தார்.

1988ம் ஆண்டு மே மாதம் மரியன் னையின் இரண்டாயிரம் ஆண்டு பூர்த்தியின் நினைவாக அதனைச் சிறப்பாகக் கொண்டா டும் வகையில் ஆலயத்தில் பக்திச் சபைகள் அமைக்கப்பட்டுக் குடும்ப வழிபாட்டினை மேற்கொள்ளும் பொருட்டு வீடுகள் தோறும் செபமாலை வழிபாடு நடாத்தப்பட்டது. இறுதி நாள் தாயாரின் திருச்சொருப பவனி புனித யுவானியார் ஆலயத்திலிருந்து ஆரம் பித்துப்புனித திரேசம்மாள் ஆலயம் ஊடாக புனித ஆசிர்வாதப்பர் ஆலயத்தினைச் சென்றடைந்து முழு நிறைவு கொண்ட பெரு விழாவாக இனிதே முடிவடைந்தது.

மரியாயின் சேனை வின்சென்டிபோல் சபை, பாடகர் குழாம், பீடப்பணியாளர் குழு, மறைக்கல்வி வகுப்புக்கள் என்பன உருவாக்கப்பட்டன. பாடகர் குழாமுக்கான இசைக்கருவிகள் (ஓர்கன்) வாங்கப்பட்டு திருவிழாக்கள், வழிபாடுகள் திறமையாக நடாத்த உதவி புரிந்தார். இளைஞர், யுவதிகளுக்கான சுற்றுலாக்கள், கரோல் வழிபாடுகள், கிறிஸ்மஸ் தினத்தின் சிறப்பு விழாவான 'ஒளிவிழா' இவரது காலத்திலே ஆரம்பமாகின.

ஆலயத்துக்கான நிரந்தர மின் இணைப்புப் பெறப்பட்டு ஒலி, ஒளி உபகர ணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு உயர் திரு S. J. மனுவல்பிள்ளை (றேடியோ மனுவல், யாழ்) அவர்களால் பொருத்தப் பட்டு ஒலி ஒளி சேவையும் வழங்கப்பட் டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணி முடி அமைப்பு:

ஆலயத்தினை மேலும் அழகுபடுத்தி சிறப்பிக்கும் வகையில் பொதுச்சபையினரின் தீர்மானத்தின் படியும் ஆலயத்துக்கு மண்டபமும், முகப்பும் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டு அதன் அமைப்பும் வரையப்பட்டது. அவரது திட்டப்படியும் பங்குமக்களது பேருதவியினாலும் 1993 காலப்பகுதியில் மண்டபமும் முகப்பும் அமைக்கப்பட்டன. ஆலயத்துக்கு முகப்பில்லாத குறை இவராலே நிறைவு செய்யப்பட்டது. மணி முடி அமைப்பில் அமைக்கப்பட்ட முகப்புத் தோற்றம் பல்வேறு இன்னல்கள் மத்தியிலும் இனிதாக நிறை வேற்றப்பட்டது.

ஆலய முகப்பின் மேல் தளத்தில் பரிசுத்த ஆவியின் அக்கினி நாவுகளும் நடுவில் கிறிஸ்துவின் சிலுவையும் அதன் கீழ் தாமரைப் பூவும் வரையப்பட்டுள்ளது. அருள்தந்தை அவர்கள் பணி செய்த இடங்களில் எல்லாம் தாமரைப் பூவினைப் பதித்து செல்வது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆண்டவரின் அழைப்பினை அறிவிக்கும் தகுந்த மணிக் கோபுரமும் 'அஞ்சாதே! நான் என்றும் உன்னோடு' என்ற இறை வார்த்தையுடன் அமைக்கப்பட்டது. மலசல கூடமும் இங்கு அமைக்கப்பட்டது. பங்குப் பணிகளை சிரமமின்றி மேற்கொள்ள வசதியாகப்பங்குபணிமனை அமைக்கத்திட்டமிடப்பட்ட போதிலும் போதிய நிதி வசதி, பொருளாதார பிரச்சினைகளால் அத்திட்டம் கைவிடப்பட்டது. ஆலயத்தின் உள்ளே வேலைகள் கிரமமாகச்செய்து முடிக்கப்பட்டு பீட அலங்கார வேலைப்பாடுகள் சிறப்பாக செய்யப்பட்டன. இவற்றுக்கான வர்ண அலங்காரங்கள் உயர்திரு யெயராசா (சாமினி இருப்பகம், யாழ்) என்பவரால் செய்து முடிக்கப்பட்டன.

புதிய ஆயனின் கீழ் ஆட்சிப்பீடம்:

'உன் பணிக்கு நான் இதோ!' என்ற இறைவாக்கினை ஏற்றுத் 'தாழ்மையுடன் பணி செய்' என்ற தனது விருது வாக்குடன் மன்னார் ஆயராக 20. 10. 1992 ஆண்டு நியமனம் பெற்றுச் சென்றார். இப்பங்கில் பணி புரிந்த அருள் தந்தையர்களுள் மூவரை ஆயர்களாக அனுப்பி வைத்த பெருமை இவ்வாலயத்துக்கே உரியதாகும்.

யாழ் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக 5. 11. 1992 ஆண்டில் இறை ஆட்சிபீடமேறிய அதி. வண. பேரருள்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் திரு ஆட்சியின் கீழ் இப்பங்கும் அமையப் பெற்றதாயிற்று.

புதிய ஆயரின் ஆட்சியின் கீழ் ஆலயப் பங்குத்தந்தையாக முன்னாள் யாழ். மறை மாவட்ட குரு முதல்வருமான அருள்திரு. மைக்கல் சாமி. அ. ம. தி அடிகள் அவர்கள் நியமனம் பெற்று பணிகளைப் பொறுப்புடன் செய்து வந்தார். இவருக்குப் பின் அருள்திரு. சந்திரபோஸ் அடிகளாரும் பங்குப் பணியினைக் குறுகிய கால இறைச் சேவையின் போதும் சிறப்பாக வழி நடாத்தி வந்தார்.

தந்தையர்களின் வரிசையில் முன்னாள் யாழ். ஆயரின் செயலாளரும் தற்போதைய மறைமாவட்ட குரு முதல்வருமாகிய அருள் திரு. J. P. E. செல்வராசா அடிகள் பங்குத்தந்தையாக நியமனம் பெற்றார். இவருடைய காலத்திலே பங்கு மக்களின் அழைப்பினை ஏற்று இங்கு வருகை தந்த மன்னார் மறைமாவட்ட ஆயருக்கு சிறப்பான வரவேற்பு 10. 02. 1992ல் அளிக்கப்பட்டது. மறைமாவட்டப் பணிகளுடன் ஆயரின் பரிபாலகராகவும் செயற்பட்டு பல்வேறு கஸ்ரங்கள் மத்தியிலும் இன்று தனது பணிகளைத் துடிதுடிப்புடன் மேற்கொண்டு வருவது பங்கு மக்களால் வரவேற்கப்பட வேண்டியதாகும்.

குழந்தை யேசுவின் சின்னத் திரேசாளின் விண்ணக மகிமை பெற்ற நூற்றாண்டின் நினைவாக அவளின் சொரூபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கப்பட்டு குடில் ஒன்று முன்றிலில் அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.


**பயன்தூக்கார் செய்த நன்றி:**

அன்று தொடக்கம் இன்றுவரை தமக்கு ஏற்பட்ட கஸ்ரங்களின் மத்தியிலும் அதனைப்பெரிதும் பொருட்படுத்தாது தமது அழைப்பினை ஏற்று இவ்வாலயம் சிறப்புற உயர்ந்து நிற்கத் தோளோடு தோள் நின்று உதவிக்கரங்கள் தந்த அருள்தந்தையர்களுக்கும் அருட்சகோதரிகளுக்கும் மற்றும் யாவரையும் இந்நாளில் நன்றியுடன் நினைவு கூர்கின்றோம்.

இன்று குழந்தையேசுவின் சின்னத் திரேசம்மாளின் நூற்றாண்டு விண்ணக வாழ்வின் நிறைவினைக் கொண்டாடும் அனைத்து உள்ளங்களுக்கும் மகிழ்ச்சி பொங்கும் இந்நன்நாளில் வாழ்த்துக்களை கூறி நிற்பதில் பெரும்மகிழ்ச்சியடைகிறேன்.

தொகுப்பு

திரு. இம்மானுவேல் யோண்சன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குழந்தை இயேசு வின் சிறிய புஷ்பம் அன்னை திரேசாளும் திரேசாளும்



30-09-1897 இல் தமது 26 ஆம் வயதில் விண்ணகம் புகுந்த மிகவும் சொற்ப காலத்தில் புனிதையாக பிரகடனம் செய்யப்பட்ட எமது பாதுகாவலி, மரித்த ஒருசில ஆண்டுகளுக்குள்ளேயே உலகப் புகழும் மகிமையும் பெற்றிருந்தார். இதன் விளைவாக புனிதராக பிரகடனம் செய்யப்பட முன்னரே அவர் பெயர் உலகின் பல இடங்களிலும் செறிந்து வாழ்ந்த கிறிஸ்தவ குடும்பங்களில் விரும்பப்பட்டு தம் குழந்தைகளுக்கு அவளுடைய பெயரை அன்போடு சூட்டினார்கள். அப்படியாக தெரிந்து பெயரிடப்பட்டவருள் ஒருவர்தான் மசிடோனியா என்ற இடத்தில் வாழ்ந்த விவசாயிகளான நிக்கொலா — டிரானா என்ற அல்பேனியப் பெற்றோர்களுக்கு மகளாக பிறந்த அன்னை திரேசா. 14 வயதடைந்த அன்னை திரேசா துறவற வாழ்வில் நாட்டம் கொள்வதற்கு இப்புனிதையே உந்துதலாக இருந்ததாக சொல்லப்படுகின்றது.

சிறுமலர் சின்னத்திரேசாவுக்கு 1925 இல் புனிதர் பட்டம் கொடுக்கப்பட்டபோது தனது பாதுகாவலியாகவும் வழிகாட்டியாகவும் சின்னத் திரேசாவை தெரிந்து கொண்டார். அதனால் 1931 மார்ச் 24 இல் அருட்சகோதரியாக அர்ப்பணம் செய்து கொண்ட ''அக்னேஸ் கொயிங்ஹா பிஜாகியூ'' தனது இயற்பெயரை ''திரேசா'' என மாற்றினார். இதிலிருந்துதான் ''அன்னை திரேசா'' என்ற பெயர் உருவானது.

தமது பெயர்கொண்ட புனிதை சின்னத்திரேசா குழந்தை இயேசுவின் சிறிய புஷ்பம் என்று பெருமையோடும் உரிமையோடும் அழைக்கப்படுகிறார். அன்னாரின் வாழ்வைப் பின்பற்றி துறவறம் பூண்டவர்தான் அன்னை திரேசா. புனிதையின் விண்ணக வாழ்வின் 100 ஆம் ஆண்டின் நிறைவை மகிழ்ச்சியாக கொண்டாடும் இந்த நாட்களில் அன்னையும் அவர் வழியே விண்ணகம் சென்றது இறைவனின் மகிமைக்கே. அவருக்கே அனைத்துப் புகழும் மகிமையும் உரியது.

அன்னை திரேசாவை உலகம் பெறுவதற்கு பங்களித்த புனித திரேசாள் எமக்கு இன்னும் பல அன்னை திரேசாக்களை பெற்றுத் தரும்படி அவர் மூலம் இறைவனை வேண்டுவோம்.

பங்குமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய சபை

பங்கில் உள்ள சகல மக்களையும் பிரதிநிதிப்படுத்தும் வகையில் அங்கத்தவர்களை உள்ளடக்கிய ஒரு சபையாக ஆரம்பகாலம் தொட்டே ஆலய சபை பங்கு மக்களால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டு வருகின்றது. இந்நிலைமை எமது மக்களின் உள மார்ந்த ஒற்றுமையையும் கூட்டுறவையும் எடுத்துக் காட்டுகின்றது.


ஆலய சபையானது சகல விடயத்திலும் பங்குக் குருவானவர்க்கு பக்கபலமாய் இருந்து உதவிகள் புரிவதுடன் எமது பங்கிற்குத் தேவையான ஆக்கபூர்வமான சகல விடயத்திலும் முன்னின்று உழைக்கின்றது. இவ்வகையில் ஆலயத்தின் பராமரிப்பு புனரமைப்பு, நிதி, இறைவழிபாடுகள் பக்தி முயற்சிகள் முதலியவற்றில் பங்குத் தந்தையுடன் ஆலோசனைகள் பரிமாறிச் செயலாற்றி வருகிறது.

முன்னர் எமது ஆலயசபையிற் கடமையாற்றி அரும்பாடுபட்டு உழைத்தவர்களில் அநேகர் வெளிநாடுகளிலும் வெளிமாவட்டங்களிலும் இருக்கின்றனர். அவர்கள் அனைவரும் எம்மால் நன்றியுடன் நினைவுகூரப்பட வேண்டியவர்கள். இறைபதம் அடைந்த ஆலயசபை உறுப்பினர்களின் ஆன்மாக்களுக்கு நித்திய வாழ்வை இறைவன் அளித்தருள வேண்டுவோம்.

தற்பொழுது நடைமுறையில் இருந்துவரும் ஆலய சபையானது இன்று எமது பாதுகாவலியின் விண்ணக மகிமை பெற்ற நூற்றாண்டு விழாவுக்கான சகல ஆயத்தங்களையும் பங்குத் தந்தையின் ஆலோசனையுடன் ஆர்வத்தோடு செய்து வருகின்றது.

எமது ஆலயசபை ஒரே குழுமமாக அன்புறவில் நிலைத்து ஆலய வளர்ச்சிக்காகவும், பங்கு மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்காகவும் முன் நின்று உழைத்திட எமது பாதுகாவலியாம் குழந்தை யேசுவின் சின்னத் திரேசாளின் பரிந்துரை வழியாக இறைவனை வேண்டுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குழந்தை இயேசுவின்
புனித திரேசாளின் விண்ணக வாழ்வின்
நூற்றாண்டு விழாவையொட்டி
அமைக்கப்பட்ட நினைவுத் தூபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயச் சபை உறுப்பினர்கள்

1. அருட் திரு J. P. E. செல்வராஜா
2. அருட் சகோதரி கத்தரீன் ஜோர்ச்
3. திரு. S. J. மனுவல்பிள்ளை
4. ,, A. ஜெயராசா
5. ,, S. சேவியர்
6. ,, J. A. மரியதாசன்
7. ,, யோசெவ் கலிஸ்ரஸ்
8. ,, D. J. ஆனந்தராஜா
9. திரு C. A. இம்மனுவேல்
10. ,, S. மரியநாயகம்
11. ,, J. A. அன்ரனிப்பிள்ளை
12. திருமதி சறோ மங்களதாஸ்
13. ,, புஷ்பராசா சாந்தி தேவதாஸ்
14. ,, லில்லி புஷ்பராசா
15. ,, விஜயா குணநாயகம்
16. ,, திரேசா றிச்சேட்
17. ,, டவ்னி அன்ரனெற் பிறாடா

## முன்னைய உறுப்பினர்கள்

1. திரு A. இராசநாயகம்
2. ,, M. A. இரத்தினசிங்கம்
3. ,, A. E. செல்வராஜா
4. ,, S. ஸ்ரனிஸ்லாஸ்
5. திருமதி மாகரெற் சூசைப்பிள்ளை
6. ,, புளோசம் யோசெவ்
7. திருமதி திரேசா கனி அன்ரனி
8. ,, கொன்சி அருளானந்தம்
6. ,, கிறேஸ் பெனடிக்ற் பாலன்
10. ,, பிலோமினா பெனடிக்ற்
11. ,, ஞானம்மா யேசுதாசன்
12. ,, விமலா இம்மானுவேல்

## பீடப் பணியாளர் சபை

1. செல்வன் S. றொட்ணி
2. ,, J. கிறிஸ்ரி பானுஜெயன்
3. ,, B. கரிசன் ஜோய்
4. ,, J. அன்றூ
5. செல்வன் S. டென்சன்
6. ,, C. பிறண்டன்
7. ,, B. நிறோஜன் ஜோய்
8. ,, L. டால்சன்

## பாடகர் குழாம்

1. செல்வி சாமினி ஜெயராஜா
2. ,, ஒலிவெற் பொபித்தா கணேசன்
3. ,, யூலியா சூசைப்பிள்ளை
4. ,, சஜினி குணநாயகம்
5. ,, கிறிஷாந்தி மரியதாசன்
6. ,, ஒலிவேற் தாரணி கணேசன்
7. ,, ஜெசிக்கா அல்பேட் பற்றிக்
8. ,, நீறஜா றிச்சேட்
9. ர்ஷிதோமஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபாட்டுக் குழு

நம் பங்குத்தளத்தில் ஞாயிறு திருப்பலிக் கொண்டாட்டம் முக்கிய இடம் பெறவேண்டும், ஏனெனில் திருப்பலி கிறீஸ்தவ வாழ்வின் மையமாகவும் ஊற்றாகவும் விளங்குகின்றது. இன்று பெரும்பான்மையான நமது மக்கள் ஆண்டவர் யேசுவை ஒரு சிறப்பான தருணம் ஞாயிறு திருப்பலியே, தங்கள் வாழ்விற்கு வேண்டிய ஆற்றலை உள்ளத்திற்குத் தேவையான உள்ளொளியை, மனதிற்குத் தேவையான தெளிவை, செய்த தவறுக்கு வேண்டிய மன்னிப்பை ஒன்றித்து வாழும் மனப்பான்மையை பெற்றுக் கொள்கின்ற ஓர் அருமையான சந்தர்ப்பம் ஞாயிறு திருப்பலிக் கொண்டாட்டம்

இத்தகைய சிறப்பு வாய்ந்த ஞாயிறு வழிபாட்டுக் கொண்டாட்டத்தையும் திருவிழா, பெருவிழாக் காலங்களிலும், வழிபாடு மக்கள் மனதைத்தொடும் வண்ணம் வாசகங்களின் மையப் பொருளுக்கேற்ப முன்னுரை விசுவாசிகளின்மன்றாட்டு என்பவற்றுடன், வாசகங்கள் வாசிப்பவர்களுக்குப் பயிற்சியையும் வழிபாட்டுக் குழுவினரும், பாடகர் குழாமும் இணைந்து செயல்ப்படுகின்றனர். திருப்பலியில் பதிலுரைச் சங்கீதத்தை பாடவோ, அன்றேல் வாசிக்கப் பட வேண்டும் என்ற திருச்சபையின் அறை கூவலை சிரமேற் கொண்டு வருகின்றோம். வழிபாடானது வாழ்வைத் தொடுவதற்கு வழிபாட்டுக் குழுவினர் எடுக்கும் முயற்சிகள் யாவும் பயன் அளித்து பயன்பெற வேண்டுவோம்

## வழிபாட்டுக் குழு

1. திரு. S. மரியநாயகம்
2. ,, J.A. மரியதாசன்
3. திருமதி. மலர் சூசைப்பிள்ளை
4. ,, சறோ மங்களதாஸ்
5. ,, திரேசா றிச்செட்
6. திருமதி ரஞ்சினி வில்சன்
7. ,, டவ்னி அன்ரனெற்பிறேடா
8. ,, சுசீலா பெனடிக்ற்
9. ,, இந்திராணி கென்றி
10. ,, வில்லி அந்தோனிப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைக்கல்வி

சிறு குழந்தைகளுக்கும் வளரும் பராயத்தினருக்கும் அன்னையாம் திருச்சபை ஆன்மீக ரீதியில் அவர்கள் நன்முறையில் ஈடேற்றம் பெறவென மறைக்கல்வி போதிக்கப்படுகிறது. இம்மறைக்கல்வி பல்வேறு வழிகளிற் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வழிகாட்டிகளாற் போதிக்கப்பட்டு வருகின்றது. நிலையில்லா இவ்வுலகில் கிறிஸ்தவர்கள் மகிழ்வோடிருந்து பிறருக்குச் சேவை புரியவும் ஏற்றவாறு அவர்கள் 'ஒளியாக'' ''உப்பாக'' மாற மறைக்கல்வி உதவுகிறது. ஆகவே, மறைக்கல்வியானது கிறிஸ்துவோடு தொடர்பை மட்டுமன்று ஒன்றிப்பையும் நெருங்கிய நட்புறவையும் ஏற்படுத்துகிறது. சுருங்கச் சொல்லின் மறைக்கல்வி கிறிஸ்துவைப் பெற்று அளிப்பதாகும். மறைக்கல்வி விசுவாசத்தில் வளர உதவி செய்கிறது. கற்பவரை உண்மையான கிறிஸ்தவ வாழ்வுக்கு உட்படுத்தலே மறைக்கல்வியின் தலையாய பணியாக உள்ளது.

சாரமுள்ள ''உப்பாக'' ''ஒளியாக'' கிறிஸ்து அவன், கிறிஸ்து அவள், என, வளரும் பருவத்தினர் வளர எமது பங்கிலும் மறைக்கல்வி போதிக்கப்படுகிறது. ஆலயம் உருவாகிய காலம் தொட்டு எமது பங்கில் உள்ள கார்மேல் கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரிகளின் தலைமையின் கீழ் மறைக்கல்வி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன. முன்னர் சனிக்கிழமைகளிற் கிரமமாக நடாத்தப்பட்டு வந்த வகுப்புக்கள் இப்பொழுது ஞாயிறு திருப்பலியின் பிற்பாடு நடாத்தப்படுகின்றன. அருட்சகோதரிகளும், ஆசிரியர்களும் மறைக்கல்வி நூல்களின் வழிகாட்டலின் கீழ்வகுப்புக்களை நடாத்துவது குறிப்பிடத்தக்கது.

ஆண்டு 1 தொடக்கம் 11வரை வகுப்புகள் நடைபெறுகின்றன. வருட முடிவில் பரீட்சைகள் நடாத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு ஒளிவிழாவின்போது பரிசில்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மாணவர் மறை அறிவு பெருக இப்பரீட்சைகள் உதவுகின்றன.

''ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கிக் கொண்டாலும் அவன் ஆன்மாவுக்குக் கேடு விளைவித்தால் யாது பயன்'' ஆம் வெறும் அழிந்து போகும் செயற்பாடுகளிற் கவனம் கொள்ளாது ஆன்மீக ஈடேற்றம் காண எமது இளைய சமுதாயம் முன்னேற உதவுதல் மிக அவசியம். அத்தகைய ஆன்மீக ஈடேற்றம் காண உதவும் மறைக்கல்வி எம் பங்கில் நடாத்தப்பட உதவி வரும் எமது கார்மேல் கன்னியர் சபையினருக்கும் மறைஆசிரியர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

எமது பங்கில் மறைக்கல்வி மேலும் வளர்ச்சியுற எமது பங்கின் பாதுகாவலியாம் புனித சின்னத்திரேசாவின் பரிந்துரையை வேண்டுவோமாக.

## மறைக்கல்விக் குழு

| | | |
|---|---|---|
| அருட்சகோதரி | கத்தறீன் ஜோர்ச் | தலைவர் |
| அருட்சகோதரி | மரிய நிரோஷா | உபதலைவர் |
| திரு | S. மரியநாயகம் | |
| செல்வி | சாமினி ஜெயராசா | |
| செல்வி | ஓலிவெற் பொபித்தா கணேசன் | |
| செல்வி | நீரஜா றிச்சேட் | |
| செல்வி | பிரியாந்தி மரீனா டயனீசியஸ் | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடகர் குழு

"இசையில் மயங்காதவர் எவரும் உண்டோ" இசையில் மயங்கி இறங்கி வருவது இறைவன் குணமாகும். பாமாலை சூடிப் பரமனை இருமுறை செபிப்பதற்கு ஒரு முறை பாட, இளம் வயதில் புனிதை யான புனித திரேசாவின் பாதுகாவலில் உள்ள எம் இளம் பிள்ளைகள் பாடகர் குழாமாகச் செயற்பட்டு வருகிறார்கள். எமது பாடகர் குழுவினை முன்னேற்றவும் அதன் வளர்ச்சியை ஏணியில் ஏற்றவும் எமது பங்குத்தந்தையர்களும், பங்கின் பொறுப்பாளர்களும் பெரிதும் முயற்சி எடுத்து வந்துள்ளார்கள்.

இடம் பெயர்வின் முன், வெகு சிறப்புடன் செயலாற்றிய எமது பாடகர் குழாம் தற்சமயம் சற்றுப் பின்னடைவு அடைய வேண்டிய நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது. காரணம் பாடகர் குழாமை மெரு கூட்டிக் கொண்டிருந்த பண்ணிசைக் கருவிகள் இடம் பெயர்வின்போது களவாடப்பட்டுவிட்டன. அத்துடன், உற்சாகத்துடன் பாடகர் குழுவில் செயலாற்றிக் கொண்டிருந்த இளம் பிள்ளைகள் சிலரும் நாட்டின் சீரற்ற நிலையின் காரணமாக வெளி இடங்களுக்குச் சென்றுவிட்டனர். இந்த நிலைமை பாடகர் குழாமிற்குச் சற்று தடங்கலைக் கொடுத்தபோதும் தற்சமயம் குழாமில் உள்ளோரின் ஊக்கமும் ஆர்வமும் காரணமாக எமது பாடகர் குழாம் மீண்டும் செயற்பட்டு வருகிறது.

எமது பங்கில் இலை மறை காயாக இனிய குரல் வளம் கொண்ட பலர் இருந்தபோதும் ஏனோ குழாமில் இணைந்து செயற்பட முன் வருவதில்லை. பலர் இதற்கு ரியூசன் வகுப்புக்களைக் காரணம் கூறுகிறார்கள். இறை தொண்டு புரிய பிறரின் வற்புறுத்தல் தேவையில்லை. இறைவனுக்காகச் சிலமணி நேரங்கள்தானும் நாம் செலவழிப்போமாயின் நூறு மடங்கு பலன் பெறுவோம். இறைவன் தந்த ஆற்றல்களை நாம் பயன்படுத்தவேண்டும். அவற்றை வளர்க்க வேண்டும். எனவே ஆற்றல் உள்ளவர்கள் பாடகர் குழாமில் இணைந்து செயற்படப் பெற்றோர் பிள்ளைகளை ஊக்கப் படுத்த வேண்டும்.

எமது பங்கிற் செயற்பட்டுவரும் பாடகர் குழாம் மேன்மேலும் வளர்ச்சியுறவும், இறை அன்பிலும் நட்புறவிலும் வளர்ந்தோங்கித் தமது பாமாலைகளாற் புகழ்பாடி இறைவனை மகிமைப்படுத்த எமது பாதுகாவலியாம் புனித திரேசாளின் பரிந்துரையை வேண்டுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீடப்பணியாளர்கள்

ஆலய வழிபாடுகளில் குருவானவர்களுக்கு பீடத்தடியில் நின்று உதவிகள் புரிவது பீடப்பணியாளரின் தலையாய கடமையாக இருக்கிறது. 2-ம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்னர் திருப்பலிச் செபங்கள், பதிலுரைகள், ஆராதனைச் செபங்கள் யாவும் இலத்தீன் மொழிகளிலேயே இருந்தபடியால், பீடப்பணியாளர்களே இலத்தின் பதிலுரைகளையும் செபங்களையும் மனனம் செய்து குருவுடன் இணைந்து செபித்தனர். சங்கத்தின் பின்னர் தத்தமது தாய் மொழிகளிலேயே சகல வழிபாடுகளையும் நிறைவேற்ற வேண்டும் என்ற திருச்சபையின் கட்டளைப்படி செபங்கள், பதிலுரைகள் மனனம் செய்யும் பாரிய பொறுப்பில் இருந்து விடுபட்டனர். இருப்பினும் செபங்களை அனைவருடனும் இணைந்து செபிக்கவும் அனைத்து உதவிகளையும் குருவானவர்க்கு செய்து முடிக்கும் கடமைப்பாடு உடையவர்களாயும் உள்ளனர்.

இப்பணிகளுக்கு பெரும்பாலும் சிறுவர்களே ஈடுபடுவதால் அவர்களை வழிநடத்த நெறிப்படுத்த பொறுப்பானவர்கள் தேவையாய் உள்ளது. எமது ஆலயம் ஆரம்பமான காலம் தொடங்கி எமது பாதுகாவலியின் பரிந்துரை போல் இப்பொறுப்பை கார்மேல் சபைக் கன்னியர்கள் திறம்பட செய்து வருகின்றனர்.

எமது பீடப்பரிசாரர்கள் தமது கடமைகளை அருட்சகோதரிகளின் வழிகாட்டல்களின் கீழ் அருட்தந்தையர்களின் கட்டளைகளை சிரமேற்கொண்டு சேவையாற்றி வருவது மகிழ்ச்சிக்குரிய விடயமே.

இப்பணியை ஆற்றுவதற்கு பல பெற்றோர் தம் பிள்ளைகளை முன் கொணராதது பெரும் துர்ப்பாக்கியமே. பெற்றோர் பிள்ளைகளை இப்பணிக்கு ஊக்குவிப்பதன் மூலம் இறைச் சிந்தனைகளையும் அவர்களுக்கு ஊட்டலாம் என்பதை மனதில் கொள்ள வேண்டும். இப்படியான பணியும் பயிற்சியும் இளம் உள்ளங்களின் வளமான வாழ்வுக்கு உறுதுணையாக அமையும் என்பது திண்ணம்

பீடப் பணியாளர் சேவை மென்மேலும் வளர்ச்சியுறவும், அவர்களது பணி சிறந்தோங்கவும் சிறு வயதில் தம்மையே இறைவனுக்கு அர்ப்பணித்த எமது பாதுகாவலி வழியாக இறைவனை இறைஞ்சுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்கில் பணியாற்றிய அருட்தந்தையர்கள்
## அருட்சகோதரிகளை நன்றியுடன் நினைவு கூறுகிறோம்

### அருட்தந்தையர்கள்

1. அருட்திரு தோமஸ் சவுந்தரநாயகம் Mis Ap,
2. ,, J. நீக்கிலஸ் Mis Ap.
3. ,, J. கிங்ஸ்லி சுவாம் பிள்ளை
4. ,, சாள்ஸ் குணம் செந்தில் o. m. i
5. அருட் கலாநிதி இரா. யோசெவ் D. C. L (Rome)
6. அருட்திரு A. பிலிப் i. v. d
7. ,, மைக்கல் சாமி o. m. i
8. ,, F. L. N. குருஸ் (சந்திர போஸ்) o. m. i

### அருட்சகோதரிகள்

1. அருட் சகோதரிகள் தேவநேசம் A. c.
2. ,, அன்ரனீனா A. c.
3. ,, லில்லி ஓசா A. c.
4. ,, கிறிஸ்ரிற்றா A. c.
5. ,, எவறில்டா A. c.
6. ,, ஞான தர்சினி A. c.
7. ,, பவள ராணி A. c.
8. ,, ஜொயிஸ்மாறி A. c.
9. ,, அருணி A. c.
10. ,, மரியமலர் A. c.
11. ,, சிறிய புஷ்பம் A. c.
12. ,, மரியபரமேஸ் A. c.
13. ,, செபஸ்ரி A. c.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவ அழைத்தல்கள்

புனித தெரேசாளின் அதி முக்கியமான பணியானது மறைபரப்புப் பணியில் ஈடுபட்டுள்ள குருக்கள் துறவியருக்கு வல்லமையுள்ள பாதுகாவலியாகவும், வழிகாட்டியாகவும் இருப்பதே, அந்த வகையில் சகல குருத்துவ துறவற சபைகளும் தேவ அழைத்தலினதும், அழைக்கப்பட்டவர்கள் உறுதியாய் நிலைத்திருக்கவும் எல்லா வழிகளிலும் அவரின் ஆதரவைத் தேடி வருகின்றன. எனவே எமது மறைமாவட்டத்தில் பணியாற்றும் சகல குருத்துவ துறவற சபையினரும் தேவ அழைத்தல் பெருக அவரிடம் உருக்கமாக வேண்டுவோம்.

1) மறைமாவட்டக் குருக்கள், (DIOCESAN PRIEST)
எமது மண்ணில் பணிசெய்வதே எமது முதற்கடமையும், தேவையும்.
தொடர்பு கொள்ளவும்,
அதிபர், புனித மடுத்தீனார் குருமடம்,
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

2) அமலமரித் தியாகிகள் (O. M. I. சபையினர்)
எமது மறைமாவட்டத்தைக் கட்டி எழுப்பி மறைமாவட்டக் குருக்களிடம் ஒப்படைத்தவர்கள்.
தொடர்பு : அதிபர், சூசையப்பர் குருமடம், யாழ்ப்பாணம்.

3) திருக்குடும்ப சபை, (Holy Family Sisters)
எமது மறைமாவட்டத்தில் பணி புரிய வந்த முதற் கன்னியர்கள்.
தொடர்பு : மாகாண முதல்வர்,
121, பிரதான வீதி, யாழ்ப்பாணம்

4) அப்போஸ்தலிக்க கார்மேல் சபை (A. C)
புனித திரேசாளின் கார்மேல் சபையிலிருந்து உருவாகிய பணிச்சபை.
தொடர்பு : முதல்வர்,
கார்மேல் மடம்,
கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

5) திருச்சிலுவைக் கன்னியர் : (Holy Cross Sisters)
நோயாளிகள், வயோதிபரைப் பராமரிப்பதோடு மற்றும் பல பணிகளிலும் ஈடுபடுகிறார்கள்.
தொடர்பு : திருச்சிலுவைக் கன்னியர் மடம்,
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

6) நல்லாயன் சபை (Good Shepherd Sisters)
கல்வி, மற்றும் மனித நேயப்பணிகள் பல புரிகிறார்கள்.
தொடர்பு : முதல்வர்,
நல்லாயன் மடம்,
நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7) திருவுளச் சபை (I. V. D)
தொடர்பு: அதிபர், திருவுளப் பணியாளர் சபை, திருவடி,
கொழும்புத்துறை வீதி, கொழும்புத்துறை.

8) அன்பின் சகோதரிகள்: (Charity Sisters)
கல்வி மற்றும் பணிகளில் ஈடுபடுபவர்கள்.
தொடர்பு: முதல்வர்,
யாவத்த வீதி, கொழும்பு — 5.

9) கிளரீசியன் சபை: பணிச்சபை
தொடர்பு: முதல்வர்,
புனித கிளாறெற் நிலையம்
வெலிசற, றாகம.

10) செபமாலைத்தாசர் தியானயோக சபை.
புனித திரேசாளைப்போல் செப, தப, தியான வாழ்வில்
ஈடுபடுகிறார்கள்.
(ஆண்கள்) தொடர்பு: அருள் ஆச்சிரமம்
கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
(பெண்கள்) தொடர்பு: முதல்வர்,
செபமாலைக் கன்னியர் மடம்.
123, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

11) யேசு சபைக் குருக்கள்:
தொடர்பு: C/O மாங்குளம் பங்குத் தந்தை
வவுனிக்குளம், மாங்குளம்

12) நற்கருணை சபை:
தொடர்பு: புனித பிலிப்நேரியார் கோவில்
புறக்கோட்டை, கொழும்பு 11.

13) புனித சூசையப்பர் அருட்சகோதரர் சபை:
தொடர்பு: ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

14) டிலாசால் அருட் சகோதரர் சபை
தொடர்பு: புனித சவேரியார் கல்லூரி, மன்னார்.

15) புனித பிரான்சிஸ்கன் சபை சகோதர சகோதரிகளுக்கும் எமது மறைமாவட்ட அழைத்தல்களைக் கொடுத்திருக்கிறோம்.

எமது மறைமாவட்டத்தில் சகல குருத்துவ துறவற சபைகளுக்கும் தேவ அழைத்தல் ஊக்குவிப்பாளரும் இயக்குனருமாக அருள் தந்தை A. F பெனற் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவருடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: புனித அந்தோனியார் ஆலயம்,
கரவெட்டி.

முதல்வர்

**அருள்திரு J. P. E. செல்வராஜா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித திரேசாளின்
# வாழ்க்கை விபரங்கள்

பிறப்பு — 2. 1. 1873

திருமுழுக்கு — 4. 1. 1873

தாய் தந்தை — திரு திருமதி லூயிஸ் மாட்டின்

சகோதரிகள் நால்வரும் — கன்னியர்கள் (கார்மேல்)

முதல் நன்மை — 13. 5. 1880

தேவதாயின் காட்சியும் புதுமையாகக் குணப்படுத்தலும்
19. 5. 1883

கார்மேல் சபையில் பிரவேசித்தல் — 1. 1. 1888

நவசந்நியாசம் — 10 .1. 1889 — 24 9. 1890

துறவற அர்ப்பணம் — 24. 9. 1890

விண்ணக வாழ்வின் ஆரம்பம் — 30. 9 1897 மாலை 7.20
நல் அடக்கம் 4 10. 1897

முத்திப்பேறு பெற்ற பட்டம் — 29. 4 1923
11 ம் பத்திநாதரால்

புனிதர் நிலைக்கு உயர்த்துதல் — 17. 5. 1925

மறைபரப்புப்பணி பாதுகாவலியாகப் பிரகடனம்
— 14. 12. 1927

பிரான்சு தேசத்தின் 2 ம் பாதுகாவலியாகப் பிரகடனப்
படுத்தப்பட்டது — 3. 5. 1944
12 ம் பத்திநாதரால்

விண்ணக வாழ்வின் நூற்றாண்டு நிறைவு -- 30. 9. 1997

திருச்சபையின் மறைவல்லுனர்களின் ஒருவராக பிரகடனம்
2ம் அருள் சின்னப்பர் -- 19. 10. 1997

தகவல் : யாழ் அப்போஸ்தலிக்க கார்மேல் சபை
அருட்சகோதரிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# " சின்னராணி "

சின்ன ராணி என்னும் சின்னத் திரேசம்மாள்
மன்னு உயிர்களெல்லாம் போற்றும்
திரேசம்மா
வண்ண ரோஜாவாக வாழ்ந்த திரேசம்மா
எண்ணில்லாத இறைபக்தி கொண்ட

அன்பு, தியாகம், பக்தி எனும்
அருட்சாதனங்கள் கொண்டு - புனித
கார்மேல் சபை மிளிர
ஒளிர்ந்த தாரகை

துறவு வாழ்வின் துன்பம்
வென்று எடுத்த தியாகி.
இழிவு வந்த போதுமே - அதை
சகித்து நிமிர்ந்த நாணல்,

சிறைச்சாலைக் கைதி பலரை
தன் சிறிய செபத்தினாலே - மனம்
மாற்றி அருள் செய்த
மங்காப்புகழ் தேவதை

கொடிய நோய் வந்த போதும்
கொடும் துன்பம் தந்த போதும்
வானிருந்து அருள் பொழிவேனென
மரணம் சென்ற மாதரசி

எக்காலமும் சுகந்தம் வீசும்
தக்கதானரோஜோச் செண்டு
றக்கா நகர் மக்களுக்காய் - தினம்
மிக்க தாள் அருள் பாவிப்பாள்

ஆக்கம் நேருஜா மங்களதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித திரேசம்மாளின்
விண்ணக வாழ்வின்
100ஆம் ஆண்டு ஞாபக
மலருக்கு எமது வாழ்த்துகள்

கஜ
மோட்டர்ஸ்

234/2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

Sole Agents For Radio
WATCHES
CAMERA

Musical Itams Sports
FANCI GOODS

ANNAM'S
No. 114, Kasthuriyar Road,
Jaffna.

புனித திரேசம்மாளின்
விண்ணக வாழ்வின்
100ஆம் ஆண்டு ஞாபக
மலருக்கு எமது வாழ்த்துகள்

விஜி
ரயர் வேக்ஸ்
நக்கா றோட் சந்தி,
யாழ்ப்பாணம்.

எஸ்லோன் பைப்,
பெயின்ற்
கட்டிடப் பொருட்கள்
நீர் இறைக்கும் யந்திரம்

மொத்தமாகவும் சில்லறையாக
வும் பெற்றுக்கொள்ள

நியூ கமல் செரமிக்ஸ்
37, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித திரேசம்மாளின் விண்ணக
மகிமை பெற்ற 100 ஆம் ஆண்டு
சிறப்புற ஆசிக்கின்றோம்

★

# V. S. B. GROUP

266A, STANLEY ROAD
JAFFNA

DUCO
DULUX
PENTALITE
PAINTS

சகல விதமான வர்ணங்களுக்கும்
எம்மை நாடுங்கள்

# கண்ணன் பெயின்ற்

234/4A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் நகர் மக்களின் நன்மை கருதி

O தேசிய அடையாள அட்டை புகைப்படம்
O அஞ்சல் அடையாள அட்டை புகைப்படம்
O பாஸ்போட் புகைப்படம்
O விசேட அடையாள அட்டை புகைப்படம்
O வெளிப்புற படப்பிடிப்பு (கலர்)

மற்றும்

வீடியோ கொப்பிகள் மேற்படி ஓடர்கள் யாவற்றையும் சிறந்த முறையில் செய்துகொள்வதற்கு உடனே நாடுங்கள்.

# பொபி ஸ்ருடியோ

அன்

# வீடியோ ஹோம்

93 ஈச்சமொட்டை, யாழ்ப்பாணம்.

---

புனித திரேசம்மாள் விண்ணக
மகிமை பெற்ற 100ம் ஆண்டில்
அவவின் அருளை வேண்டி நிற்கும்

## கோப்பாய் பனை, தென்னை வள அபிவிருத்தி

கூட்டுறவுச் சங்க நிர்வாகிகள்

பருத்தித்துறை வீதி

கோப்பாய் தெற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ நம்பிக்கை
★ நாணயம்
★ நயம்

பெயின்ற் வகைகள்
ஆணி வகைகள்
கட்டிடப் பொருட்கள்

யாவற்றையும் உங்கள் விருப்பத்திற்கேற்ப
பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரே ஒரு ஸ்தாபனம்

# சாமினி இரும்பகம்

242, A ஸ்ரான்லி றோட் யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமலரே

பனிச்சிடும் பிரான்சினிலே
பரமனுக்காய் அவன்ஸ்சோன் என்னும் ஊரில் மலர்ந்த
சிறுமலரே
பால் மணம் மறக்க முன்பே
பாலகன் யேசுவுக்காக வாழத் துடித்தவளே

மழலை கரத்திற் பந்தினைப் போலவே
மாபரன் இயேசு கரத்தில் தவழ்ந்தவளே
பனியை விரும்பிடும் பனித்துளியே
பாவிகள் மனம் திரும்ப மன்றாடும் ரோஜா மலரே

துவண்டதில்லைத் துன்பத்திலே
துணையாம் இயேசு இருக்கையிலே என்றனையோ
தூரஇருக்கும் பரிசுத்த மலையினிலே
துணையாக இயேசுவின் கரம்பற்றி நடந்தவளே

மனிதரிற் பெறாமை கொள் எமக்குப் பொறுமையே
மனிதரைப் பிரித்திடும் எமக்குப் பிறர் அன்பினையே
மனிதரைத் தாழ்த்திடும் எமக்கு தாழ்மையையே
மனிதர் பிரியாமல் இறைவனிடம் சேர்ந்திடக் கற்றுத்
தந்த நறுமலரே
கசநோயினையே கசப்பின்றியே
கனிவுடன் ஏற்ற கன்னிகையே
கலங்காமற் கடமைகளையே
களிப்புடன் செய்தனையே

இருமிடும் வேளையிலும் இறைவனையே
இறைஞ்சிடும் இன்மலர் நீயன்றோ
இறக்கின்ற வேளையிலே
இயேசுவை அன்பு செய்த நறுமலரே

வாழ்விற் புண்ணியங்கள் புரிந்தவளே
வானுக்கு உயர்ந்த வெண்ணிலவே
வாடாத ரோஜா மலரே
வரங்கள் வானின்நின்று ரோஜாவாகப் பொழிபவளே

மண்ணிற் பிறந்த சிறு மலரே
மாந்தரில் உயர்ந்த சிறு மணியே
மண்ணிற் புதைந்த நூறு ஆண்டினையே
மாண்புடன் மகிழ்ச்சியாய் நினைக்கின்றோம்

**செல்வி. கணேசன் ஒலிவர் ஜெனீவா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

## (புனித திருமுழுக்கு அருளப்பர் பங்கின் சார்பில்)

எழில் நகராகிய யாழ்நகரின் கிழக்குப் பகுதியில் சுண்டுக்குளிப்பங்கில் றக்கா (காவலர்) வீதியில் பாலயேசுவின் புனித திரேசம்மாள் ஆலயம் அமைந்துள்ளது. அப் புனிதை திருவடி சேர்ந்த நூறாவது ஆண்டு பூர்த்தியாகும் வேளையில் முதன் முறையாக "சிறிய பூ" வின் திருப்பணியை மாபெரும் நன்றிப்பெருக்குடன் ஆலய மக்கள் நினைவுகூரும் முகமாக இன்னல்கள் இடர்பாடுகள் நிறைந்த சூழ்நிலையில் வெளியாகும் மலருக்கு யாழ் சுண்டுக்குளி புனித திருமுழுக்கு அருளப்பர் பங்கின் மைந்தன் என்ற ரீதியில் வாழ்த்துரை வழங்குவதில் உலப்பிலா உவகையும் மனநிறைவும் அடைகிறேன்.

எம் தாய்ப்பங்கின் இணைந்த ஆலயமாக புனித திரேசம்மா ஆலயம் இருந்த போதும் அது கால் நூற்றாண்டிற்குமேல் பல்வேறு பரிமாணங்களுக்கூடாக வளர்ச்சியும், உயர்ச்சியும், எழுச்சியும் அடைந்து வருவதையிட்டு பெருமிதமடைகிறேன்.

புனித திரேசம்மாள் நவீன உலகிற்கு ஒருசிறந்த விடிவெள்ளியாக துலங்குகிறாள். இற்றைக்கு 1873-01-02 இல் இவர் பிறந்தார். பிரான்ஸ் நாட்டில் கடிகார தொழிலாளியான லூயிஸ் மாட்டின் என்னும் உத்தம பெற்றோருக்கு கிடைத்த ஒன்பது பிள்ளைகளில் ஐந்து புத்திரிகளும் நான்கு புத்திரர்களும் "கனியிலிருந்து மரத்தை அறிவது போல" பெற்றோரின் நற்பண்புகள் யாவும் பிள்ளைகளிடம் மிளிர்ந்தன. ஐந்து பெண்களும் துறவற வாழ்வைப் பூண்டார்கள். கடைசி மகள் தான் இன்றைய துறவற வாழ்வின் வீரநங்கையாகும். கருவிலே திருவுடையராக திரேசாள் தோன்றியதினால் திருத்தந்தையிடம் விசேட அனுமதிபெற்று பதினைந்து வயதிலே துறவறம் பூண்டு கிறீஸ்துவின்மேல் கொண்ட அதீத அன்பினால் தூண்டப்பெற்று யேசுவுக்கே முழுவதும் தன்னை பூரணமாக அர்ப்பணித்து மகிழ்வுடன் ஞானபத்தினியாக வாழ்ந்து 1897-09-30ல் 24 வயதில் இறைபதமடையும் வேளை "என் இறைவா நான் உம்மை நேசிக்கிறேன்" என உயிர் நீத்தார்.

கார்மேல் சபையை உருவாக்கிய புனித அவிலா திரேசம்மாவின் மாபெரும் முத்துவாக கருதப்பட்டவள் பாலகயேசுவின் "சிறிய பூ" என்னும் புனித திரேசம்மாள். இவவின் துறவற வாழ்வின் அணிகலன்களாய் திகழ்ந்தவை செப, தப, கீழ்ப்படிதல், கற்பு, பரித்தியாகம், மனிதநேயம் என்பன யேசுவின் அன்பினால் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் புனித திரேசாள் அளப்பரிய துன்பங்களை அனுபவித்து அவற்றை பல்லாயிரக்கணக்கான ஆன்மாக்களின் ஈடேற்றத்திற்காக ஒப்புக்கொடுத்தாள். இவவின் "சிறிய வழி" மூலம் மாபெரும் சாதனைகளை புரிந்துள்ளார்

புனித திரேசம்மா மூலம் உதவியை நாடும் பக்தர்கள் பிறரன்பு மூலம் இறையன்பை அடையலாம் என உணர்ந்து செயல் பட்டால் இகபர நன்மைகளை இலகுவில் அடையலாம் என்பது வெள்ளிடைமாலையாகும்.

புனிதை காட்டிய சிறிய வழிமூலம் எம் வாழ்வாலும் வாக்காலும் கிறீஸ்துவின்

> **"உலகெங்கும் போய்ப்படைப்பிற்கெல்லாம்**
> **நற்செய்தியினை அறிவியுங்கள்."**
> (புனித மாற்கு 16:15)

என்பதின் பங்காளியாகுவதே சிறந்த பணியாகும்.

இல்லை எனக் கேட்போருக்கு இரங்கி யேசுமூலம் பெற்றுத்தரும் புனிதையிடம் நம் ஈழவள நாட்டில் உயிர்களும் உடமைகளும் தினமும் அழிந்துகொண்டு செல்லும் வேளையில் எமக்கு சமாதானமும் சுபீட்சமான வாழ்வும் மலரவேண்டுமென இவர் மூலம் யேசுவிடம் இறைஞ்சுவோம். நற்பணியில் ஈடுபட்ட அனைவரும் பாராட்டிற்குரியவர்களே.

துரை. ஆரோக்கியதாசன்
*B.A.Dip.Ed.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனிதையின் பாதையிலே....

இளமையிலேயே துறவற வாழ்வில் தன்னை இணைத்து, குறுகிய காலத்தில் (24 வயதில்) இறைவனடி சேர்ந்த புனித (சின்னத்) திரேசாவின் வாழ்வு எமக்குக் கற்பிக்கும் பாடம்தான் என்ன? அவளது திருநாட் திருப்பலியின் சபை மன்றாட்டில், "புனிதையின் சிறிய வழியை நாங்கள் நம்பிக்கையுடன் பின்பற்றச் செய்தருளும்" என்று செபிக்கின்றோம். இந்தச் **சிறிய வழிதான்** என்ன?

தனது நாளாந்த சாதாரண பணிகளை—சுத்தம் செய்யும் பணி, தைக்கும் பணி, வயதில் முதிர்ந்த சகோதரிகளைக் கண்காணிப்பது..... இவற்றை முழு அன்புடனும், ஆர்வத்துடனும் செய்து, அவள் புனிதையானாள். நாமும் புனிதத்துவம் அடைய ஒரு 'குறுக்கு' வழியை அவள் எமக்குக் காட்டியுள்ளாள். சுருங்கக் கூறின் சாதாரண பணியையும், அசாதாரண அன்புடனும் ஆர்வத்துடனும் செய்வதே அவள் எமக்குக் கற்பிக்கும் '**சிறிய வழி**.'

பல்வேறு துன்பங்களாலும், நம்பிக்கையீனங்களாலும் வறுமை நோய்களினாலும் அலைக்கழிக்கப்பட்டு, எமது விசுவாசப் பயணத்தில் தளர்ந்து தவிக்கும் நாம் இன்று எமது சூழலிலே அவளது இந்தச் 'சிறிய வழி'யைப் பின்பற்றுவதால் எமது விசுவாசத்தில் உறுதியடைவதுடன், நாமும் எமைச் சூழவுள்ளோருக்கு இயேசுவின் அன்பினதும், மன்னிப்பினதும், ஒற்றுமையினதும், நீதியினதும் சாட்சிகளாக வாழ்வோம். ஆவியின் ஏவுதலை ஏற்று வாழ்கின்றவர்களாவோம்: "கடவுளின் ஆவியால் இயக்கப்படுகின்றவர்களே கடவுளின் மக்கள்" (உரோ. 8 : 14). இவ்விழுமியங்களைக் கடைப்பிடிக்க நாளாந்தம் எமக்கு நூற்றுக்கணக்கான சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றன. இவை ஒவ்வொன்றையும் சின்னத் திரேசாளின் 'சிறிய வழி'யிற் பயன்படுத்தி வாழ முற்படுவோமானால் எமது வாழ்வில் நன்மைகள் நிறையச் செய்வோம். எம் வாழ்வு அர்த்தமுள்ளதாக இருக்கும். நாமும் இயேசுவின் அன்பின் சீடராக வாழ்ந்து, பல்வேறு துன்பங்களால் நலிந்து வாடும் எமது சமுதாயத்திற்கு புத்துயிர் கொடுப்போம், நாமும் புத்துயிர் பெறுவோம். புதியதொரு படைப்பாக எமது கிறிஸ்தவ சமுதாயம் மாறும்.

அதற்கு மாறாக எமது கிறிஸ்தவ வாழ்வு வெறுமனே ஞாயிறு திருவிழாத் திருப்பலிகளுடனும் ஆலயத்தை புனருத்தாரணம் செய்யும் பணியிலே மட்டும் தங்கியிருக்குமாயின் ஆவியின் ஏவுதலுக்கு முற்றும் முரணானதும், யாருக்குமே நிறைவளிக்காததுமாய் எமது கிறிஸ்தவ வாழ்வு மாறிவிடும்.

புனிதர்களின் திருப்பலியின் தொடக்கவுரையில் இதனையே நாம் செபிக்கின்றோம்.
"புனித வாழ்வுக்குச் சிறந்த சாட்சிகளாகத் திகழும் புனிதர்களால்"

நாங்கள் மனவுறுதி பெற்று,
வாழ்க்கைச் சமரிலே தோல்வியடையாது போர் புரிந்து,
கிடைத்ததற்கரிய மகிமையின் முடியை அப்புனிதரோடு
எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துவோடு
பெற்று மகிழ்வோமாக."

**செல்வி. சுனீத்தா பெனடிக்ற்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித திரேசாள் ஆலயத்தில்
## கார்மேல் கன்னியர் சபையினரின் பணி

எமது பரலோக பாதுகாவலியாம் புனித திரேசாளுக்கு அவளது விண்ணக வாழ்வில் நூற்றாண்டை நினைவு கூர்ந்து விழா எடுக்கும் நாம் ஆலய வளர்ச்சியில் எமக்கு உதவி வருபவர்களையும் நினைவுகூர வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த வகையில் றக்கா வீதியில் அமைந்துள்ள கார்மேல் கன்னியர் சபையினர் எமக்காற்றி வரும் சேவைகளை நாம் நோக்குவது சாலவும் பொருந்தும் என்று கருதுகிறோம்.

புனித திரேசாள் ஆலயம் ஆரம்பகாலத்திற் சிறு கோவிலாக இருந்து வந்த நாள்கள் தொடக்கம் இன்றுவரை காலத்துக்குக் காலம் கார்மேல் கன்னியர்கள் சபையில் உள்ள அருட்சகோதரிகளிற் சிலர் குறிப்பிட்ட காலத்திற்கு ஒருவராகச் சேவையாற்றி வருகின்றார்கள். ஆரம்ப காலங்களில் வழிபாட்டுக்கு வேண்டியவை யாவும் ஆலயத்தில் வைத்துப் பராமரித்து தேவையான பொழுது எடுப்பதற்கு வசதிகள் இருக்கவில்லை. நீண்டகாலம் கார்மேல் கன்னியர் சபையினரே ஆலய வழிபாடுகள் ஆரம்பிக்கும் முன்பாக பொருட்களை எடுத்து வந்து அவ்வாறே வழிபாட்டின் பின்னரும் அவற்றை மீள எடுத்துச் சென்று பராமரித்து எமது ஆலயத்திற்காக அரும்பாடுபட்டுள்ளனர்.

அடுத்ததாக வழிபாட்டின்போது பீட ஒழுங்குகள் அலங்கரிப்புக்கள் என்றுமே அவர்கள் கைவண்ணமாகத்தான் இருக்கிறது. பங்கு மக்கள் வழிபாட்டிற்கு வரும் முன்னராகவே பீட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுவிடும். ஒவ்வொரு வழிபாட்டின்போதும் அதற்கேற்ப வகையில் ஒழுங்கமைப்புடன் சிறப்பாக அவர்கள் இன்றுவரை பீட வழிபாட்டு ஆயத்தங்களை மேற்கொண்டு வருகிறார்கள்.

பீடப்பணியாளரை ஒழுங்குபடுத்தி வழிபாட்டிற் பங்கு கொள்ளவைக்கும் பணியையும் கார்மேல் கன்னியர் சபை அருட்சகோதரிகளே மேற்கொண்டு வருகிறார்கள். ஆலயத்தினுள் மட்டுமன்று வெளிப்புறங்களும் ஆலயத்தைச் சுற்றியுள்ளவர்களாற்பராமரிக்கப்பட்டு வந்தாலும் இவர்களின் வழிகாட்டலின் கீழ்தான்யாவும் நடைபெற்று வருகின்றன.

எமது பங்கில் நடைபெற்றுவரும் மறைக்கல்வி வகுப்புக்கள் கூட இவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்று வருகின்றன. அது மட்டுமல்லாது வழிபாடுகளின்போது வேறெதிலும் இளம் பராயத்தினர் கவனம் செலுத்தாது, வழிபாட்டில் முற்று முழுதாக ஈடுபட வைக்கின்றனர். சிறு வயதினர் தவறு செய்தால் வழிபாடுகளின் பின்னர் அவர்களை கண்டித்து நல்வழிப்படுத்த அட்ருசகோதரிகள் தவறுவதில்லை.

எம்பங்கிற் பணியாற்ற அருட் தந்தையர்களுடன் இணைந்து எமது கார்மேல் சபையின் அருட்சகோதரிகள் அரிய பல பணிகள் புரிந்துள்ளார்கள். இன்றும் தமது பணியைத் தொடர்ந்தும் ஆற்றி வருகின்றார்கள். இன்றுவரை பணியாற்றிய அருட் சகோதரிகளுக்கும், பணியைத்தொடரும் அருட் சகோதரிகளுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். கார்மேல் கன்னியர் சபையினர் பணி மேன்மேலும் சிறக்க அவர்களுக்கு வேண்டிய உடல் உள நலத்தை இவர்கள் பெறப் புனித திரேசாளின் பரிந்துரையை வேண்டுவோமாக.

திருமதி. டவ்னி அன்ரனெற் பீரேடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹுமாலா துவிச்சக்கரவண்டி

துவிச்சக்கரவண்டி உதிரிப்பாகங்களின்
ஏகவினியோகஸ்தர்கள்

**வெங்கடேஸ்வரா**

**79, கஸ்தூரியார் வீதி**
**யாழ்ப்பாணம்**

---

*யாழ். நகரில் உத்தரவுபெற்ற*
*வானவில்லின் வர்ணசாலங்கள் கொண்ட*
***டியூகோ - டியூலக்ஸ் - பென்ரலுட்***
***Duco - Dulux - Pentalite***
*பெயின்ட்வகைகள் மொத்தமாகவும்*
*சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள*
*நாடவேண்டிய இடம்*

★

**NEW STANLEYS**
95/1, STANLEY - ROAD
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசுத்த திரேசம்மாளின் 100-ம் ஆண்டு நிறைவு
விழாவை வாழ்த்துகின்றேன்.

யாழ் நகரில் கஸ்தூரியார் வீதியில்
தரமான தளபாடங்களுக்கு,

சிறந்த ஒரே இடம்!

# திரேசா தளபாட மாளிகை

155, 157 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

*உங்கள் வீட்டை அலங்கரிக்கும்*

குசன் செற்றிகள், சோக்கேசுகள், கண்ணாடி
மேசைகள் கட்டில்கள் பிளாஸ்ரிக் கதிரைகள்
காரியாலய மேசைகள் கதிரைகள்
சிறந்த மெத்தை வகைகள் CEYESTA, R.P FORM
தலையணைகள், சிறுவர்களை மகிழ்விக்கும்
குதிரைகள் ஊஞ்சல்கள், நிண்டகால பாவனைக்கும்
தர உறுதியும் உடைய தளபாடங்கள்
நியாய விலையில் கிடைக்கும் இடம்
திரேசா தளபாடமாளிகை.

*வாருங்கள்! வந்து பாருங்கள்!*
*வாங்கிச் செல்லுங்கள்!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரன் காட்வெயர்

- டியூகோ
- டியூலக்ஸ்
- பென்ரலைட்
- DUCO
- DULUX
- PENTALITE

*ஆகிய பெயின்ற் வகைகளையும்*

கட்டிட பாவனைக்குத் தேவையான கட்டுமான பொருட்கள் அத்தனையும் மலிவு விலையில் நாடவேண்டிய ஸ்தாபணம்

**தரன் காட்வெயர்**

*ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித திரேசம்மாளின் விண்ணக வாழ்வின்
100ம் ஆண்டு ஞாபகமலருக்கு எமது
"வாழ்த்துக்கள்"

## ஜெசிபா ஏஜென்சி

★ கட்டடப் பொருள்கள்

★ பெயின்ற் வகைகள்

★ வாகன உதிரிப் பாகங்கள்

மொத்தமாகவும்

சில்லறையாகவும்

பெற்றுக் கொள்ள

நம்பிக்கை
நாணயம்
நிறைந்த தாபனம்

# JEISHEBA AGENCY
# ஜெசீபா ஏஜென்சி

132, ஸ்ரான்லி றோட்
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லாண்டு வாழ்க எம்
# சின்ன மலரே

எம் அயலில் குடிகொண்ட சின்ன மலரே,
எமக்கு அருள்பல வழங்கும் புனித மலரே,
எம்மை வழிநடத்தும் நேசமலரே,
எமக்கு அன்பைப் பொழியும் பாசமலரே,
நீ வாழ்க வாழ்க.

அன்புப் பெற்றோரின் அரவணைப்பில் பிறந்து,
ஆசையுடன் சகோதரரின் மடியில் வளர்ந்து,
இணையற்ற அன்புடன் சின்ன இயேசுவிற்
பாசம் கொண்டு,
உலக வாழ்வை வாஞ்சையுடன் துறந்து,
ஊணுறக்கமின்றி அன்புப்பலி புரிந்து,
சின்ன வயதிலே கொடிய நோயிலே வாடி,
எல்லையில்லா ஆனந்தத்துடன் இறைவனடி சேர்ந்த,
சிறுமலரே நீ வாழ்க வாழ்க

ஆண்டு நூறு ஆனதம்மா – நீ
மோட்ச இன்பம் கண்டு,
இன்பமுடன் வாழ்த்துகின்றோம் - உன்
பொற்பாதம் பணிந்து,
நம்மவரின் குறைநீக்கி, றோசாமலர்களினால்
அருள்மாரி பொழியும் சிறுமலரே
ஆனந்தம் பெருகக் கண்ணீர் மல்கி
நன்றி கூறுகின்றோம், எம் கரங் குவித்து,
நேசமலரே நீ வாழ்க வாழ்க.

சின்னஞ்சிறிய குடிலில் எம்மத்தியில் வாசமானவளே - இன்று
வானளாவிய மரங்களின் இசைதாளங்களின் நடுவே,
கம்பீரமாய் எழுந்து நிற்கும் தேவாலயமதில் வீற்று,
கருணை மழை பொழியும் கருணாவதியே
நீ வாழ்க, வாழ்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம் திருத்தலத்தில் பணிபுரியவென அழைத்த
சிறிய குருக்களை - இன்று
திருக்கோலுடன் இறைமக்களை வழிநடத்தும்
நல் ஆயர்களாக உருவாக்கி,
சேவை செய்த அருட்கன்னியர்களையும் மறவாமல்
ஆசி பல பொழிந்து,
பசியின் கொடுமையால் அயல்நாடு சென்ற எம் மவர்க்கு,
நல்ல ஆயனாக அரவணைத்துக் காக்கும் -
எம் பாதுகாவலியே நீ வாழ்க வாழ்க.

போர் மேகம் சூழ உனை விட்டு
நாம் சென்ற போதும்
உன் வேண்டுதலினாலும் புதுமையினாலும்
எம்மை மீண்டும் எம் இல்லம் அழைத்த,
எம் சின்னமலரே நீ வாழ்க வாழ்க.

ஆண்டு நூறு ஆனாலும்,
ஆயிரம் ஆண்டுகள் கடந்தாலும்
ஆறாது நாம் கொண்ட அன்பு,
ஓயாது எம் நன்றிப்பா,
எம் சின்னமலரே உம்மை ஆசையுடன் வாழ்த்துகின்றோம்
நீ வாழ்க வாழ்க.

ஆக்கம்

செல்வி நீறஜா றிச்சேட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித சின்னப்புஷ்பம் தெரேசாவின்
# சிந்தனைகளும் பொன் மொழிகளும்

1. ஒரு தண்டின் மீது வைத்த விளக்கு வித்தியாசமில்லாமல் எப்படித்தன்னைச் சுற்றி இருக்குமோ எல்லாவற்றிற்கும் ஒளி கொடுக்குமோ, அப்படியே நாமும் நம்மைச் சூழ இருக்கும் யாவரையும் பேதமற்ற முறையில் அன்பு செய்ய வேண்டும்.

2. எனக்கு ஒரு நெம்பு கோலையும், ஆதாரத்தானத்தையும் கொடுங்கள். நான் உலகைப் புரட்டுவேன் என்றார் விஞ்ஞானி ஆர்க்கிமீடிஸ். அதே போல கடவுளை ஆதாரத்தானமாகவும் செபத்தை நெம்பு கோலாகவும் கொண்டு நம்மால் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை.

3. பரிசுத்தம் என்னும் மலைமீது என்னால் தனித்து ஏறமுடியாது. கிறீஸ்து யேசுவின் துணை கொண்டு அம் மலைமீது ஏறுவேன்.

4. நரகத்தில் அன்பின் செயற்பாடு இருக்கமுடியாது. ஆகவே, கடவுளுக்குச் சித்தமாகில் அன்பை வெளிப்படுத்த நரகத்திற்குச் செல்லக் கூட நான் ஆயத்தமாக இருக்கின்றேன்.

5. மற்றவர்களினால் எனக்கு வரும் சிறு சிறு துன்பங்களை, எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் நழுவ விடாமல், என் ஆன்ம வளர்ச்சிக்காகத் தாழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்வேன்.

''ஜோ''

நன்றி: ஒரு புனிதரின் சுயசரிதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய உலகில் எமது கிறிஸ்தவ வாழ்வு

திருச்சபையானது, இவ்வுலகில் வாழும் மக்களையே அங்கத்தினராகக் கொண்டிருந்தாலும் இவ்வுலக சமூக அமைப்பாக நாம் திருச்சபையை நோக்குவதில்லை. கிறிஸ்துவையே தலையாகக் கொண்டு அவரின் ஆவியினால் இயக்கப்பட்டு, உயிருட்டமுள்ள அன்புறவில் தழைத்தோங்கும் சமூகமாக அது உள்ளது. இச்சமூகத்தில் வாழும் இறைமக்கள் ஒவ்வொருவரும் ஒரே விதமான பணிக்கு அழைக்கப்பட்டிருக்கின்றோம் [ திரு.5 ]. நாம் கிறிஸ்தவர் என்ற மட்டில் கிறிஸ்துவின் மீட்புப் பணியைத் தொடர்ந்து ஆற்றவேண்டியவர்களாக உள்ளோம். ''திருமுழுக்கு மூலம் கிறிஸ்தவ அழைப்பைப் பெற்றதிலிருந்தே பொதுநிலையினரின் மறைத்தாதுப்பணி அரும்புகின்றது'' என இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூறுகின்றது.

இன்றைய உலகில் பொதுநிலையினர் ஒவ்வொருவரும் தத்தமது பணியைச் செய்து புனிதத்துவம் அடைய வேண்டும். ஏனெனில் பொதுநிலையினரின் பணித்தளம் இவ்வுலகே. ஒவ்வொருவருக்கும் பல்வேறு பணிகள் — போதிக்கும் பணி, சமூகப்பணிகள், கல்விப் பணி, மருத்துவப் பணிகள் உள்ளன. இந் நிலையில் பொதுநிலையினராகிய எமது பணி என்ன? நானும் என் குடும்பமும் என்ற கூட்டத்திற்குள் வாழ்வதா? துன்புறும் மக்களின் துயர் துடைக்க என்னைக் கையளிப்பதா? இப்படியான கேள்விகள் எம் உள்ளங்களில் எழவேண்டும்.

இப்பணிகளை ஆற்ற அடிப்படை அலகாக பங்கு அமைப்பே உள்ளது. அதுவே அடிப்படைத் தலத்திருச்சபையாகும். அங்கு இறைவார்த்தை கேட்டல். அப்பம் பிட்குதல், நட்புடன் உறவாடுதல், பகிர்தல் [ அப். பணி 2:42 ] போன்ற அடிப்படைப் பண்புகள் மிளிர வேண்டும். ஆனால் எமது பங்குகளைப் பார்க்கும்போது அங்கு நிலைமைகள் தலைகீழாகக் காணப்படுகின்றன. இறைவார்த்தையைக் கேட்டலும், அப்பம் பிட்குதலும் சடங்கு மனப்பான்மைக்குள் அகப்பட்டுக் கொண்டு விட்டன. செபித்தல் மனனம் செய்த மனவிரக்திகளுடனும், சில பல பக்தி முயற்சிகளுடனும் இன்று காணப்படுகின்றன. நட்புடன் உறவாடுதலும் பகிர்தலும் மிகவும் குறைந்து போய் போட்டிகளும் சண்டை சச்சரவுகளும், சுயநலமும் நிர்வாகச் சிக்கலும் நிறைந்து காணப்படுகின்றன.

பொது நிலையினராகிய நாம் பெரும்பாலும் எமது பொறுப்புக்களை உணராதவர்களாகவே வாழ்ந்து வருகிறோம். பொறுப்புக்களைக் குருக்கள், துறவிகளில் சுமத்திவிட்டு வாழாவிருந்து விடுகிறோம். கோவில் விழாக்களை ஆடம்பரமாகக் கொண்டாடுவதுடனும் சில பக்தி முயற்சிகளுடனும் எமது கிறிஸ்தவ வாழ்வை வைத்துக் கொள்கிறோம். உலகிற்கு ஒளியாக உப்பாக இருந்து அதனைப் புதுப்பிக்க வேண்டும், என்ற கிறிஸ்துவின் அழைப்பை உணரத் தவறியுள்ளோம். "உலகின் நடுவிலே, உலக அலுவல்கள் மத்தியிலே வாழ்வது பொது நிலையினருக்கே உரித்தான தொன்று. ஆகவே கிறிஸ்துவின் உணர்வால் தூண்டப்பெற்றவர்களாய் புளிக்காரம் போல் உலகிலே இருந்து, தம் மறைத்தாதுப் பணியை ஆற்ற இறைவனால் இவர்கள் அழைப்புப் பெறுகின்றனர்'' எனச் சங்கம் கூறுகிறது.

எனவே எமது வாழ்வை நிலைக்கேற்ப கிறிஸ்தவ மதிப்பீடுகளின்படி வாழ வேண்டும். நல்ல குடும்ப தலைவனாக,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத் தலைவியாக, நல்ல ஆசிரியராக, நல்ல தொழிலாளியாகச் செயற்பட வேண்டும். மேலும் எல்லா வகையிலும் துன்பங்களுக்கு உள்ளாயிருக்கும் மக்களுக்கு கிறிஸ்தவ உணர்வால் தூண்டப்பட்டவர்களாகப் பணிபுரிவது எம் ஒவ்வொருவரின் கடமையாகும். இறைவன் எமக்கு அளித்துள்ள கொடைகளுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப நாம் செயற்பட வேண்டும். இன்று எம்மைச் சூழ இடம்பெறும் நிகழ்வுகளை உய்த்துணர்ந்து உதவிட விழைய வேண்டும்.

இவ்வாறாக பொதுநிலையினராகிய நாம் எவ்விடத்திலும், எவ்வேளைகளிலும் கிறிஸ்தவ மதிப்பீடுகளுடன் வாழ்ந்து இன்றைய சமுதாயத்திற்கு உப்பாக, ஒளியாக, புளிக்காரமாக வாழ்வோமாக. இதுவே எமது கிறிஸ்தவ வாழ்வின் அழைத்தலாகும். இத்தகைய அழைத்தல் வாழ்வு ஊட்டமுள்ளதாக திகழ வேண்டுமானால் அன்று ஆதிக்கிறிஸ்தவ சமுதாயத்தில் இடம்பெற்ற இறைவார்த்தையை கேட்டல், செபத்தில் நிலைத்திருத்தல், நட்புடன் உறவாடுதல் அப்பத்தைப் பிட்டுப்பகிர்தல் என்பன இடம்பெறவேண்டும். பொது நிலையினராகிய எம்மிடையில் சகோதரத்துவம் ஒருவர் ஒருவரைக் கட்டியெழுப்பவும், சவால்களை ஒன்றித்து எதிர்த்துப் போராடவும் பலம் வாய்ந்ததாக இருக்கும். இதனால் எமக்கு ஏற்படும் சவால்களுக்குப் பதிலளித்து இறைத் தந்தையின் திட்டத்தை நிறைவேற்றுவதில் பங்காளிகளாவோம்.

செல்வி சாமினி ஜெயராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாளர் அறிக்கை

பொறுமைக்கும், பணிவுக்கும் நம்பிக்கைக்கும் உறைவிடமாக விளங்கும் புனித திரேசாள் கிறீஸ்தவர்களுக்கு மட்டுமன்றி உலகில் உள்ள சகல மதங்களுக்கும், சகல இனங்களுக்கும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினாள். புனித திரேசாளின் விண்ணக வாழ்வின் நூற்றாண்டு நிறைவு விழாவை இட்டுப் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது மக்களும் நாமும் சந்தித்த மாபெரும் போர்ச் சூழல்களில் இருந்தும் இடம் பெயர்வின் பொழுது மனித பலவீனத்தால் யாவும் அழிந்துவிட்டது என்று அவநம்பிகையில் வாழ்ந்து வந்தோம். உயிர், உடைமைகள் இழந்த தன்மைகள் உடன் பிறப்புக்களின் சிதறுண்ட தன்மைகள் ஏற்பட்டாலும், அஞ்சாதே, மக்களே நான் இருக்கின்றேன் என எம் அனைவரையும் விண்ணில் இருந்து மலர்களை அருள்மாரியாகப் பொழிந்து பாதுகாத்து வழி நடத்திய எமது பாதுகாவலியாம், புனித திரேசம்மாளை சிரம் தாழ்த்தி நன்றி கூறுகின்றேன்.

ஆலயத்தைப் புனரமைப்புச் செய்வதற்கு அன்பளிப்புச் செய்த பங்கு மக்களுக்கும்.

வெளிநாடுகளில் இருந்து பங்களிப்புச் செய்த பங்கு மக்களுக்கும்.

புனித திரேசாளின் நூற்றாண்டு விழாவுக்குச் சகல விதத்திலும் துணை நின்ற சகலருக்கும்.

இந்த நினைவு மலர் மூலம் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சொலமன் சேவியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ நம்பிக்கை

★ நாணயம்

★ நல்ல தரம்

பட்டுப்புடவைகள்
சேட்டிங் சூட்டிங்
என்பவற்றை உங்கள் எண்ணம்
போல் எண்ணற்ற
ரகங்களில் தெரிவு செய்திட
இன்றே விஜயம் செய்யுங்கள்

# லைடன் புடவை

# நிலையம்

**32, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை யேசுவின் சிறிய புஸ்பம்
புனித திரேசம்மாள் விண்ணக மகிமை
பெற்ற 100ம் ஆண்டு விழாவில்

ஆசியையும் அருளையும் வேண்டி நிற்கும்.

▲ நிர்வாகி

▲ ஆசிரியர்கள்

▲ மாணவர்கள்

★

# SAMROCK ACADEMY

CHUNDIKULI
JAFFNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித திரேசம்மாளின் விண்ணக வாழ்வின்
100 ம் ஆண்டு ஞாபக மலருக்கு
எமது வாழ்த்துக்கள்.

"லொயலாஸ்"

*திருமண வைபவங்களுக்கான*
*வாடகைப் பொருள்கள்*

- திருமணக்கார்
- மணப் பெண்களுக்கான புக்கே செற்
- நவீன அலங்கார பிளாஸ்டிக கதிரைகள்
- நவீன ரகமான சிங்கப்பூர் சோடினை
- இரும்புக் கதிரைகள்
- குஷன் கதிரைகள்
- தகரப் பந்தல்
- சமையல் பாத்திரங்கள்
- றிபன் மாலைகள்
- சில்வர் பீங்கான், ரம்பிளர், ஐஸ்கிறீம் கப்
- பிளாஸ்ரிக் றே

*உங்கள் வைபவங்கள் சிறப்புற அமைய*
*நாட வேண்டிய ஒரே இடம்*

# லொயலாஸ்

195, பிரதான வீதி
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ லுமாலா ஏசியா ஆர்த்தி மிதிவண்டிகள்,
மோட்டார் சயிக்கிள்கள்.

★ மிதிவண்டி உதிரிப்பாகங்கள்,
ஆட்டோ உதிரிப்பாகங்கள்.

★ வாட்டர் பம், ஜெனறேற்ரர்கள்
பெயின்ற் வகைகள்.

★ றேடியோ, மணிக்கூடு

★ வீடியோ கசற், ஓடியோ கசற்

★ மற்றும் பல்பொருள்.

*விற்பனையாளர்கள்*

(மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்)

# இ. ச. பேரம்பலம் சக
# நிறுவனம்

**50 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

புனித வளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம். 1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org